

# திறவுகோல்

2056 சித்திரை

மாத இதழ்

## இனிய

# தமிழ்ப் புத்தாண்டு

## நல்வாழ்த்துகள்!!

---

வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# உன்னதமான உறவுகள்

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்று நம் முன்னோர்கள் உணர்வுகளின் அருமையை அறிந்தே கூறிச்சென்றனர். உறவு வட்டம் பெரிதாக இருக்கும் குடும்பங்களில் மகிழ்ச்சியும் மனநிறைவும் தானாகவே குடியேறும். தனிமரம் தோப்பாகாது என்பதை போல உறவுகளை சூழ வாழாதவர்களுக்கு மனமகிழ்ச்சி கிட்டாது. வாழ்க்கையில் நம் எவ்வளவு உயரத்துக்கு சென்றாலும் நம் குடும்பத்தையும் உறவுகளையும் மறப்பது ஏறி வந்த ஏணியை எட்டி உதைப்பது போன்றதே. அது பெரும் இழுக்கு. ஒரு காலத்தில் கூட்டுக்குடும்பம் என்பது வாழ்வின் ஒரு அங்கமாய் திகழ்ந்தது. அம்மா,அப்பா,தம்பி,தங்கை, ஆத்தா, தாத்தா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை,மைத்துனர், மச்சினிச்சி, கொழுந்தன்,கொழுந்தியாள், அண்ணண், அண்ணி என்று எத்தனை உறவு முறைகள் ஒரு சிறிய வீட்டில் இப்படி ஒரு பெரிய பட்டாளங்களுடன் வாழ்ந்து மகிழ்ந்தோம். அத்தனை பேரிடமும் ஒட்டுமொத்தமான அன்பையும்,அக்கறையையும், பாசத்தையும், உரிமையையும், நம்பிக்கையையும் ஒருசேரப்பெற்று அளவலாவிய மகிழ்ச்சியை அனுபவித்து வாழ்ந்தோம்.

சொந்த பந்தங்களிடமும், உற்றார் உறவினர்களிடமும் நாம் இன்று இழந்தது ஏராளம். ஒரு மனிதன் தன் சுக,துக்கங்கள் மற்றவர்களிடம் பகிரப்படும் வேளையில் அவை நம் உறவுகளிடம் சென்றடையும் போது சுகம் இரட்டிப்பாகும், துன்பங்கள் குறைந்து மனம் இலகுவாகும். துன்பம் தீர வழியும் அந்த உறவுகளின் மூலம் கிடைத்துவிடும். இன்றோ தன் துன்பங்களை யாரிடம் வெளிக்காட்டுவது என்று தெரியாமல் ஆதரவுக்கு ஆளின்றி உள்ளேயே வைத்திருக்கும் மனிதன் மனம் இறுக்கமடைந்து துன்பத்திற்குள்ளாகிறான். கூட்டை பிரிந்த பறவையை போன்று அன்பு,அக்கறை,பாசம், மகிழ்ச்சி என்ற அனைத்தையும் இழந்து கூட்டுக்குடும்பத்திலிருந்து பிரிந்து பொருளாதாரத்தை முன்னிறுத்தி எதற்காக ஓடுகிறோம், யாருக்காக ஓடுகிறோம் என்றே தெரியாமல் உறவுகளை சுருக்கி உள்ளதை இறுக்கமாக்கி நாமே செய்துகொண்ட தீமை நாம் இன்றைய வாழ்வு. நம் சமூக கட்டமைப்பும் அப்படியே மாறிவிட்டது.

நடுச்சாமத்தில் பிள்ளைக்கு உடம்பு முடியலைன்னா அந்த இரவில் பொட்டுவண்டி கட்டிக்கிட்டு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் தாத்தா, எப்பா வெறும் வயித்தோட வெளையாட போவதே ரெண்டு இட்டிலியை தின்னுட்டு போடா என்று கெஞ்சும் ஆத்தா, அவனுக்கு ரஸ்தாளி பழம் புடிக்கும்னு செயராமு கடைல வாங்காந்தேன் என்று குடுக்கும் சித்தப்பா, தூங்கிய பிறகு புரோட்டா வாங்கி வந்து அரை தூக்கத்தில் எழுப்பி ஊட்டிவிடும் அம்மாவும் அப்பாவும், கரும்பு கட்டு, வாழைத்தாருடன் பொங்கல் வரிசைக்கு வந்திறங்கும் மாமாவும் அத்தையும், ஆவணி மாசம் ஆனா போதும் பலாக்காய் பறித்து வந்து கொடுக்கும் அடுத்த தெரு ஆறுமுகம் மாமாவும், கறிக்குழம்பு வச்சிட்டா கறிய எல்லாத்தையும்

புள்ளைக்கு போடுன்னு வெறும் குழம்பை ஊற்றி தின்னும் குடும்பமும், இந்த அத்தனை அழகான பாசத்தை அள்ளித் தெளிக்கும் உறவுகளும் கூட்டுக்குடும்பத்தில் தான் அது நமக்கு கிடைக்கப்பெற்ற  பெரும்வரம். ஆனால் இன்றோ அம்மா, அப்பா

ஒன்றோ அல்லது இரண்டோ பிள்ளைகள் என்று நம்மை நாமே சுருக்கி மிகக் குறுகிய வட்டத்துக்குள் வாழ்கின்றோம். அன்றோ பெரிய வீடு கூட்டுக்குடும்பம், வறுமையிலும் மனநிறைவான வாழ்க்கை ஆனால் இன்றோ பொருளாதாரத்தில் எவ்வளவு மேம்பட்டாலும் வேண்டியதை வாங்க வசதி இருந்தும் உறவுகளை இழந்து மகிழ்ச்சியையும், பாசத்தையும் தொலைத்துவிட்டு தேடிக்கொண்டிருக்கிறோம்.

வறுமை நிறைந்திருந்தாலும் கவலையும்,மன அழுத்தமும் இல்லாத வாழ்க்கை அன்று இருந்தது. இயல்பாகவேய சூது, வாது இல்லாத வெள்ளந்தியான மனிதர்கள் நம்மைச்சுற்றி நிறைந்திருந்தனர். ஒருவரையொருவர் சார்ந்து ஒற்றுமையுடன் வாழ்ந்தனர்.  ஒவ்வொரு வீட்டிலும் வீடு முழுவதும் குழைந்தைகளாக இருந்த அன்றைய காலம் மாறி இன்று ஒரு குழந்தை பிறப்பதே அரிதாகி இருக்கிறது. இப்படியே போனால் நல்லது கேட்டதுக்கு வந்து நாலு சனம் இல்லாமல் போய்விடாதா? ஒரு குழந்தை உள்ள வீட்டில் அன்றோ உறவினர் அறிவுரை கூறுவார்கள் "ஒன்னோட நிப்பாட்டிராதிங்க ஆணோ, பெண்ணோ இன்னொன்னு பெத்துக்கோங்க, அதுங்க காலத்துல ஒன்னுக்கொன்னு ஒத்தாசையாவாவது இருக்கும்" இந்த அனுபவமான வார்த்தைகள் கூட உறவுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து தான்.

இன்றைய காலத்தில் குழந்தை ஒன்றாக சுருங்குவதற்கு காரணம் பொருளாதாரம் பற்றிய சிந்தனையும், குழந்தை வளர்ப்பின் இயலாமையுமே. அன்றைய கூட்டுக்குடும்பத்தில் குழந்தைகள் உறவுகள் மற்றும் அண்டை அயலரால் வளர்க்கப்பட்டனர். காலையில் தூக்கி செல்லும் குழந்தையை அந்தியில் தான் வீட்டிற்கு கொண்டு வந்து விடும் அன்பான உறவுகள் அன்று இருந்தனர். ஆனால் இன்று தாய், தந்தையர் மட்டுமே குழந்தையை வளர்க்கின்றனர். சொந்த பந்தங்கள் சூழ வளரும் குழந்தை நேர்மறை எண்ணங்களுடன் பாசப்பிணைப்பில் வளருகின்றது. உறவுகளின் தொடர்பில்லாமல் குறுகிய வட்டத்தில் வளரும் குழந்தை பொழுதுபோக்கை மனிதர்களுடன் கழிக்காமல் அலைபேசி, தொலைக்காட்சியில் கழித்து தனிமைப்படுத்தப்பட்டு குறுகிய மனப்பான்மையில் வளருகின்றது.

கற்காலம் தொடங்கி மனிதர்கள் கூட்டம் கூட்டமாக தான் வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஏன் சங்க காலத்திலிருந்தே போருக்கு போதும் அந்த வீட்டின் ஆண்மகன் தன் மனைவியையும், மக்களையும் யாரை நம்பி விட்டுச்சென்றான் தன் உறவுகளை நம்பித்தான். நம் வாழ்வின் இன்ப துன்பங்களில் பங்கேற்கும் உறவுகளின் உன்னதத்தை ஒவ்வொருவரும் உணர வேண்டும். "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்று வெறும் வார்த்தையாக நம்

முன்னவர்கள் சொல்லிப் போகவில்லை. உணர்வால் அனுபவத்தால் கூறியிருக்கின்றனர். நம் உறவுகளிடமிருந்து வெகு விரைவாக அசைபோடும் நம் மனம், அந்த உறவுகளால் நடந்த பல நல்ல செயல்களை அசைபோடுமானால் வாழ்வில் பல பிரச்சனைகள் சரியாகும். இந்த உலகில் 100 சதவீதம் சரியானவர்கள் யாரும் இல்லை. குறை, நிறைகளோடு தான் உறவுகளை ஏற்றுக்கொண்டு வாழவேண்டும். அப்படி குறைகளை மட்டுமே அளவிட்டு இன்றைய தலைமுறைகள் இழந்த உறவுகள் ஏராளம்.

நம்முள் ஒழிந்திருக்கும், மறைந்திருக்கும் திறமையை நமக்கே வெளிச்சமிட்டு காட்டுவது நம் சொந்தக்காரர்கள் தான். ஆமாம், அத்தனை பேருக்கு முன்னாடி அன்னைக்கி அவர்

என்னை இழிவா பேசிவிட்டார் என்னை கேவலப்படுத்திவிட்டார், என்ற சீற்றத்துடன் இவர்கள் முன்னாடி நான் நல்லா வாழ்ந்துகாட்டனும் என்ற மன உறுதியுடன் கடினமாக உழைத்து முன்னேறுவதும் அவர்களால் தான். கடின உழைப்பு நம்முடையதாக இருந்தாலும் அதற்கு தூண்டுகோல் அந்த உறவுகளால் தானே!

அன்றெல்லாம் ஒரு கூட்டுக்குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே ஒரு பிரச்சனை, மனவருத்தம் என்றால் கணவன் கோவமாக பேசிவிட்டு வேலைக்கு கிளம்பிவிடுவான். மனைவி அழுதுகொண்டு நிற்பதை பார்த்து அந்த வீட்டின் மூத்தவர் (அவர் தான் அந்த வீட்டின் அனைத்தையும் முடிவு செய்வார்) என்னம்மா? ஏன்மா அழுவுற அந்தப்பய ஏதும் பேசுனானா? அவன் வரட்டும் ரெண்டுல ஒன்னு பாத்துடுறேன் கேக்க யாருமில்லன்னு நெனச்சிட்டுருக்கானா அவன், விடு விடு, நீ அழுவாத நான் பாத்துக்கிறேன். என்று அந்த பெண்ணை சமாதானப்படுத்திவிட்டு பின் இரவு அந்த கணவன் வீடு வந்ததும் அவரை அந்த பெண்ணின் முன் கோவமாக பேசி பின் தனியாக அழைத்து அவரிடம் புத்தி சொல்லி அனுப்புவார். இப்படி கணவன் மனைவிக்குமான பிரச்சனை ஒரே நாள் இரவுக்குள் முடிந்துவிடும். ஆனால் இன்றோ தொலைபேசி வந்ததின் விளைவு மாறி மாறி கோபங்களை வெளிப்படுத்தி இருவருக்குமான சண்டை அதிகமாகின்றது அதுவே சிலநேரங்களில் உறவுமுறிவு வரை கொண்டுசெல்கிறது காரணம் இன்றைய தனிப்பட்ட உரிமை என்ற கட்டமைப்பில் வாழும் வாழ்க்கையில் அவர்களின் பிரச்னையை கேட்கவோ, அறிவுரை கூறி அமைதிப்படுத்தி,சுமூகமாக அவர்களை வாழவைக்கவோ உறவுக்கூட்டம் அவர்களிடத்தில் இல்லை. அப்படியிருந்தாலும் அவர்களின் பேச்சிக்கு மதிப்பும் இல்லை. இப்படி எல்லாவற்றையும் இழந்ததால் வாழ்வையும் நிறைய பேர் இழந்து நிற்கும் நிலை இன்று அதிகமாயிருக்கிறது.

கோடிக்கணக்கில் சொத்துபத்துக்களை சேர்த்துவைத்து ஒருவன் வாழ்ந்தாலும் சொந்த,பந்தங்கள் இல்லாத வாழ்க்கை பயனில்லாதது தான். சொந்த பந்தங்களிடம் எதிர்பார்ப்புகளை குறைத்துக்கொள்வதில் தான் மனநிறைவே இருக்கின்றது. இல்லாவிடில் ஏமாற்றம் தான். ஆனால் நமக்கான உரிமைகளை யாருக்காகவும் ஒருபோதும்

*விட்டுத்தரக்கூடாது. எவ்வளவு காசு,பணம் கொடுத்தாலும் அந்த உரிமைகளுக்கு விலையில்லை. அது ஒரு இன்பம்,ஒரு பெருமை.*

*அத்தனை பேர் இருந்தாலும் தன் தங்கைக்கு பிள்ளை பிறந்ததும் பெருமகிழ்வுடன் முதன் முதலில் பாலாடையில் சீனிப்பால் தொட்டு வைத்து பெயர் சூட்டுவதும், தன் மடியில் அமர வைத்து காத்து குத்துவதும், பின் வளர்ந்து பெரியவள் ஆனதும் தென்னை ஓலையில் குச்சி கட்டி முதல் சீர் செய்வதும், தங்கச்சி உன் புள்ளய என் புள்ளக்கி கட்டி வச்சிடு, நம்ம சொத்தம் விட்டுப்போக்கூடாது என்று அன்றைக்கே அச்சாரம் போடும் அழகான உறவு தாய்மாமன் உறவு! அப்பாவுடன் கூட பொறந்த அக்காவோ,தங்கையோ தனக்கு மருமகன் பொறந்திருக்கானு பெருமையா அந்த தெருவுக்கெல்லாம் இனிப்பு வழங்கும் அத்தையின் உறவு! ஆர்லிக்ஸ் பாட்டிலுடன் பிள்ளையை பார்க்க வந்து நிற்கும் அண்டை அயலாரின் உறவும் அழகானது!*

*அவன் அவோ அப்பா,அம்மா சொல்லியே கேக்கமாட்டான், ஆனா அவோ சித்தப்பன கண்டா பொட்டி பாம்பா அடங்கிருவான் என்ற உவமையும் கம்பீரமான சித்தப்பாவின் உறவு.*

*ஒருவீட்டின் தாத்தாவும்,ஆத்தாவும் அந்த குடும்பத்தின் அரணாக நிற்கும் தூண்கள், அந்த குடும்பத்திற்கு பெரிய பலம்,தைரியமும் நம்பிக்கையும் அவர்களே! எல்லா விடயங்களுக்கும் அவர்களிடம் தீர்வு கிடைக்கும். நாள்,கிழமை,நல்லது கெட்டது என்று அனைத்தையும் தன் ஞானத்தால் அறிந்து அறிவுறுத்தும் களஞ்சியங்கள், இன்றைப்போல் அல்ல அன்று அந்த குடும்பத்தில் எல்லாவித முடிவுகளையும் எடுப்பதும் தாத்தா தான் அதற்கு வீட்டின் அனைவரும் கட்டுப்படுவர். தன் பேரப்பிள்ளையை தோளில் அமரவைத்து திருவிழாவிற்கு அழைத்துச்செல்வதும்,நொங்கு வெட்டித்தருவதும் தாத்தா உறவு ஒருபுறம் என்றால், பேரன் எதைக்கேட்டாலும் வாங்கித்தருவதும், இரவு உறங்கச்செல்லும் போது கதைசொல்லி உறங்க வைக்கும் அன்பான பாட்டி உறவு மறுபுறம். கணவனின் பெயரை எப்படிக்கேட்டாலும் மறந்தும் சொல்லாத பாட்டியும், பேரப்பிள்ளைகள் தான் வாழ்க்கை என்று வாழும் தாத்தாக்களும் வாழ்வில் திரும்பக்கிடைக்காத வரங்கள்.*

*கூட்டு குடும்பத்தில் வாழும் ஒருவன் ஒரு காரியத்தில் இறங்கும் போது அந்த வீட்டின் மூத்தவரிடம் ஆலோசனை கேட்டு ஒப்புதல் பெற்ற பின்பே அதில் இறங்குவான்,ஏனெனில் அவன் ஒருவேளை அந்த காரியத்தில் அரை மனதாக இருந்தாலும் மூத்தவர்கள் எதிர்காலத்தின் நல்லது கெட்டதுகளை உணர்ந்து, அவனுக்கு கொடுத்த நம்பிக்கையூட்டும் அறிவுரைகள் அவனை எந்தவித யோசைனையுமின்றி திடமான முடிவுகளை எடுக்க உதவும். திருநாள்களிலும், நல்ல காரியங்களுக்கு செல்லுமுன்போ தங்கள் பிள்ளைகளை, அந்த வீட்டின் முதியவர்கள் காலில் விழுந்து ஆசி பெற்று செல்லுமாறு பெற்றோர்கள் அறிவுறுத்துவார்கள், காரணம் அவர்கள் நினைத்து செல்லும் காரியங்களில் ஏதேனும்*

தடைகள் வந்தால் அவர்களின் ஆசி அந்த தடைகளை நிவர்த்தி செய்து நல்லபடியாக நிறைவேறும் என்பது நம் தமிழ்ச்சமூகத்தின் மரபு. ஆனால் அந்த பணிவோ,அடக்கமோ இன்றைய பிள்ளைகளிடம் பார்ப்பதே மிகவும் அரிதாக இருக்கின்றது காரணம் கூட்டுக்குடும்பம் அழிந்து போனதே.

மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்வதில் தான் மகிழ்ச்சியும், நம்பிக்கையும், மனநிறைவும் என்பதை முக்கியமாக குடும்பங்களில் நடக்கும் மங்கள நிகழ்வுகளில் தான் உணர முடியும். அதிலும் அன்றைய காலங்களில் வீட்டில் திருமணம் என்பது சுகமான, பல அழகான நினைவுகளை சுமந்த திருவிழா போன்று நடைபெறும். தன் மகன், மகளுக்கு திருமணம் செய்ய அங்கும், இங்குமாக வரன் தேடி சிரமப்படுகிறார்கள் இன்றைய பெற்றோர்கள் ஆனால் அன்றோ பெற்றோர்கள் சொந்தக்காரரர்களின் திருமணத்திற்கு தன் வயது வந்த ஆண், பெண் பிள்ளைகளை அழைத்துவருவார்கள். திருமணத்தில் உறவுகளை சந்திக்கும் போது அந்த பிள்ளைகளை நேரில் பார்த்ததும் பிடித்திருந்தால் அந்த நொடிப் பொழுதிலேயே அந்த வீட்டிலிருக்கும் பெரியவர்கள் அவர்கள் பெற்றோரிடம் நேரடியாகச் சென்று "உன் மகளை என் மகனுக்கு நிச்சயம் பண்ணிக்கலாமா?" என்று கேட்டு அந்த இடத்திலேயே பாக்கு, வெற்றிலையை மாற்றி வர்ற ஆவணி மாசத்துல கல்யாணத்த வச்சிக்கலாம் என்று வந்திருக்கும் திருமணம் முடிவிலேயே அடுத்த திருமணத்திற்கு அச்சாரம் போட்டு சில மணித்துளிகளில் முடிவு செய்யப்பட்ட எத்தனையோ திருமணங்கள் இன்றும் பல தலைமுறை தாண்டி சிறப்புற்று நிற்கின்றது.

"வீட்டை கட்டிப்பார்,கல்யாணம் பண்ணிப்பார்" என்று நம் முன்னவர்கள் சொன்னதைப் போல ஒரு திருமணத்தை நடத்துவது அவ்வளவு எளிதான காரியமல்ல. அதில் சொந்த பந்தங்களின் பங்கு முக்கியமான ஒன்று. இன்றை போல் மொத்த திருமண நிகழ்வையும் நிகழ்ச்சி மேலாண்மைக் குழுவிடம் ஒப்படைத்து விட்டு வருகிறவர்களை பொம்மைகளை போல் வாயிலில் நின்று வரவேற்பதல்ல அன்றைய திருமணம். வீட்டில் திருமணம் முடிவாகியதும் முதலில் அண்ணன், தம்பிகள், பங்காளிகள், மாமன் மச்சான் என்று சொந்த பந்தங்கள் அத்தனை பேரையும் ஒன்று சேர்த்து திருமணத்திற்கான பத்திரிக்கை,சாப்பாடு தொடங்கி மறுவீடு அழைப்பு, கரி விருந்து வரை அனைத்தையும் சரியாக திட்டமிட்டு அதற்கான பொறுப்பை அவர்களிடம் கேட்டு வேலைகளை பிரித்துக்கொள்வர்.

சொந்தபந்தங்கள் பெயர்களை முறையாக வரிசைப்படுத்தி பத்திரிக்கையில் அச்சிட்டு, ரெண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பே நேரடியாக அவர்கள் வீட்டுக்கு சென்று பத்திரிக்கை வைத்து அழைப்பதும் அதிலும் மாமன், மச்சான் வீடுகளுக்கு பச்சை பாக்கு என்ற முறையும், பங்காளிகளுக்கு வெறும் பத்திரிக்கையும் வைத்தே அழைப்பார்கள். பச்சை பாக்கு என்பது பத்திரிக்கையுடன் வெற்றிலை, பாக்கு, 5 அல்லது 10 ரூபாய் பணம் வைத்து தான் அழைக்க வேண்டும் என்பது முறை. அந்த முறையை சரியாக செய்யவில்லை என்றால் கோபித்து கொண்டு வீடு தேடி வந்து உரிமையுடன் சண்டைபோடுவார்கள், திருமணத்திற்கும் சில

நேரங்களில் வரமாட்டார்கள் காரணம் அது எதிர்பார்ப்பல்ல அதை அவர்கள் ஒரு உரிமையாக, கௌரவமாக கருதுவார்கள்.

திருமணத்தின் போது தாய் தந்தையர்களை விட அந்த மணப்பெண், மணமகனின் தாய் மாமனுக்கே முன்னுரிமை இன்றும் நம் தமிழ்ச்சமூகத்தில். அரசாணைக்கால் நடும் அண்ணன், நாத்தி விளக்கு பிடிக்கும் தங்கை, மிஞ்சி போடும் கொழுந்தியாள், மணமகனை மணமேடைக்கு அழைத்து வரும் மாப்பிளை தோழனான மைத்துனன், திருமணத்துக்கு வந்த எல்லோரையும் நன்றாக கவனித்து சாப்பிட வைத்து அனுப்பிய பங்காளிகள், திருமணம் நன்கு முடிந்ததும் குடும்பத்தின் அனைவரையும் ஊருக்கு கெழக்க நிக்க வச்சி ஆரத்தி எடுத்து திருட்டி கழிக்கும் பெரிய ஆத்தா, திருமணம் நன்றாக நடந்து கொண்டிருக்கும் போது சபையில் அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தாலும் சின்ன வயதிலிருந்து தாலாட்டி,சீராட்டி வளர்த்த, எங்களுடனே இத்தனை நாள் இன்பமாய் காலத்தை கழித்த எங்கள் அன்பு மகள் இன்னும் சற்று நேரத்தில் எங்களை விட்டு விட்டு மறுவீடு செல்லப்போகிறாளே என்று கவலைப்பட்டு கண்ணீர் விட்டு அழும் அந்த பெண்ணின் பெற்றோர், உறவினர்கள் என்று பாசத்தை கொட்டி கொடுக்கும் இத்தனை பொக்கிசமான உறவுகளையும் நாம் எப்படி தொலைத்தோம்.

காலாண்டு, முழு ஆண்டு தேர்வின் விடுமுறை என்றால் மாமா வீட்டுக்கும்,அத்தை வீட்டுக்கும்,பாட்டி வீட்டுக்கும் சென்று நம் உறவுகளுடன் ஒன்று கூடி மகிழ்ந்து உல்லாசமடைந்த நம் தலைமுறை எங்கே? ஒரு அறையில் அமர்ந்து அலைபேசியில் விளையாண்டுகொண்டிருக்கும் இன்றைய தலைமுறை எங்கே?

இந்த உலகம் தன்னலமான மனிதர்களால் சூழப்பட்டுவிட்டது. உறவுகளின் மேன்மையை உணராமல் பொருளாதாரத்தை நோக்கி ஓடும் நாம் உடல் தளர்ந்து ஓய்வெடுக்கும் நிலையில் நம்மை சூழ்ந்து நமக்கென்று ஆறுதல் சொல்ல நமக்கென்று நாலு உறவுக்கூட்டம் இல்லாமல் போனால் ஓடாய் உழைத்த உழைப்பெதற்கு? நம்மை கேட்க பார்க்க நம்மை சுற்றிய உறவுகள் இருந்தாலே போதும் அவர்களின் ஆறுதலில் உடலும் பணமும் பலமடையும். கோடி கோடியா சொத்து வைத்திருந்தாலும் உறவுகள் இல்லாதவன் பரம ஏழை தான்.

ஒரு மரம் தவிர்க்க நல்ல நிலமும் நீரும் தேவைப்படுவதைப் போல மனித வாழ்வு சிறக்க உறவுகளின் அன்பும், அரவணைப்பும் அவசியமாகிறது. உறவுகளின் உன்னதத்தை நம் பிள்ளைகளுக்கு உணர்த்துவோம். தொலைந்து போன உறவுகளை புதுப்பிப்போம். உறவுகளை பேணுவதில் தானே உண்மையான களிப்பும் மனநிறைவும் உள்ளது.

- நா. செல்வமுருகன், சிங்கப்பூர்.

# கொஞ்ச நேரம்...

ஒரு விசயம்
பற்றிய
மனது கொண்ட
விருப்பத்தில் இருந்தும்

புத்தி கொண்ட
நம்பிக்கையில் இருந்தும்

'கொஞ்ச நேரம்'
விலகி

மாற்று கருத்துக்களலயும்
முன் அபிப்பிராயமின்றி
யோசித்த பின்

முடிவுகள் எடுக்கபடுமாயின்
வெற்றிக்கான சாத்தியங்கள்
மிகவும் அதிகம்...

## உயர்வானவர்களாய்

யாராலும் அறிய முடியாது என்ற
போதிலும்
'தவறு செய்யாமை'

மேற்பார்வை
நினைவூட்டல்
இல்லாமால்
'கடமை செய்தல்'

கடனை என்று
செய்யாமல்
செய்யும் பணியில்
'ஆத்மார்த்தம்'

வசை மொழி
அப்பப்ப
பரிசனாலும்
'காரியத்தை கைவிடாதிருத்தல்'

கொடுக்கப்பட்ட
அதிகாரங்கள்
'பணிக்கு மட்டுமே'

பாராட்டு கிடைத்தாலும்
ஆர்ப்பாட்டம் இல்லாமால்
'தொடர் பணி செய்தல்'

கிடைத்த அனுபவங்களை
'பகிர்தல்'

இவர்களும்
உயர்வானவர்கள் தான்...

## இப்படி ஒரு கோணத்தில்...

யோசிக்காமால்
செய்த காரியத்தில்
கூட 'வெற்றி'
என்று சொல்லப்படுகையில்...

இந்த கணத்தில்
வேண்டுமானால்

சிந்திக்கப்படாமால்
இருந்திருக்கலாம்

ஏற்கனவே
பயணப்பட்டு
யோசிக்கப்பட்டு
அனுபவப்பட்டது

மூளையின்
ஞாபக அடுக்குகளில்
சேமிக்கப்பட்டதால்

காரியம்
வெற்றியானது...

சரி தானே?...

## சுற்றி... சுற்றி...

காலக்கெடுவுகளுக்ள்
முடிக்க வேண்டிய பணிகளில்

தான் செயல் ஆரம்பித்து
பிறர் அதில் தன் செயல் சேர்த்து
பின் அதை முடிக்க வேண்டிய
தருணங்களை நினைத்துப்பார்த்தால்...

அப்பாப்பா

பிற தினசரிகளில்
கவனமற்று

வேறு பணிகள்
மறந்து

ஆழ்ந்த உறக்கமின்றி

ரசித்து உண்ண வேண்டிய
உணவை இயந்திரமயமாய்
எடுத்துக்கொண்டு

சுற்றி சுற்றி
அதை நோக்கியே
சிந்தனைகள்...

## பார்க்காமலே...

இடைவெளி இல்லாமால்
இயங்கும்
தொலைக்காட்சி பெட்டி

அழுக்கில்லாமால் ஆடைகள்
உலரும் நைலான் கயிறு

ஆள் நடமாட்டமில்லாத சாலைகள்

கசாப்புக்கடைக்காரின்
சந்தோஷம்

இவை நாட்காட்டியை பார்க்காமலே
இன்று ஞாயிற்றுக்கிழமை
என்று நினவுபபடுத்துகின்றது...

## மீண்டும் மீண்டுமா?

நம்பிக்கை இழப்பு
என்றால்
முன்னர் பெற்ற வெற்றியையும்

நிதானத்துக்கும்
பொறுமைக்கும்
நாம் கண்ட
அதற்கான
பலனையும்

எண்ணத்துக்கும்
தெளிவுக்கும்
வாசிப்பையும்

பிறரின்
சீரிய எண்ணத்துக்கும்
அளப்பரிய செயல்பாட்டுக்கும்
பாராட்டுக்கு

விருப்பு வெறுப்பற்ற
மன நிலையும்

மீண்டும் மீண்டும்
எண்ண வேண்டுமா
என்றால்
'ஆம்'

## தவிர்க்க இயலா

இன்றையவைகளின்
அடிப்படையில்

நாளையவை
பற்றிய
தீவிர சிந்தனையில்
எண்ண
செயல்பட்டு
பட்டியலிடும்
பொழுதின்
இடையில்

'போன முறை
இப்படித்தான்'

என முந்தைய
நிகழ்வுகள்
காட்சியாவது

தவிர்க்க இயலாதவை

## கற்றதா?

வாழ்க்கை பயணத்தில்

எதை
செய்யக்கூடாது

எதை செய்ய வேண்டும்

எப்போது
செய்ய வேண்டும்

செயல் தோல்வி
என்றால் காரணம் என்ன

சரி செய்ய என்ன
செய்ய வேண்டும்

முக மொழி பார்த்து
மனம் அறியும் அவசியம்

வசை மொழி பரிசாகையில்
காட்ட வேண்டிய எதிர்வினை

நம்மின்
பிடிக்காத பேச்சை உணர்தல்

பிறரின் பிடிக்காத
பேச்சில் ஒதுங்குதல்

வாக்குவாதம் உச்சம்
தொடுகையில் இடம் பெயருதல்

தோல்விக்கும்
சோகத்துமான
ஆறுதல் எது

வெற்றியிலும்
பாராட்டிலும்
எவ்வாறு இருப்பது

இலக்குகளும்
செயலுக்குமான
எப்படி திட்டமிடல்

செயலில்
குறுக்கிடுகளை
சமாளிப்பது

இவை
அனுபவங்களினால்
கற்றதா

இல்லை
நெஞ்சில் தைத்தது

## அதனாலே

உள்ளத்து
உவகை
வருத்தம்
வேதனை
ஆசை
எதிர்பார்ப்பு
ஆச்சார்யம்
தகவல் பகிருதலில்

உடன்பாடோ
இல்லையோ
குறுக்கிடாமால்
விமர்சிக்காமால்
நகைச்சுவையோ
வேறு பக்கம்
திசை திருப்பும்
உதட்டு மொழியோ
வேண்டாமே

பேச்சு தடைபடும்
என்பதால் மட்டுமல்ல

அது மனித உணர்வுகளுக்கு
தரும் மரியாதை

## எது வரை?...

வெளியூலக
ஆச்சாயர்களும்
மகிழ்வுகளும்
நிகழ்வுகளும்
செய்திகளும்

நம்மோடு
பயணிப்பது

எது வரை?

மனதுக்குள்
பூகம்பமோ
சுய இரக்கமோ
வருத்தங்களோ
ஏக்கங்களோ
இதுவா? அதுவா?
என்ற பட்டிமன்றமோ
இல்லாத வரை...

## சொன்னதும், கேட்டதும்...

நேரிலோ
அலை பேசியிலோ
எப்படி இருக்கே?
வீட்டில் நலம் தானே?
என சொல்லும் வார்த்தைகள்

உதட்டு வார்த்தையா
உள்ளத்து வார்த்தையா
உறுதியாக தெரியாது

ஆனால்
கேட்பவருக்கு
இவர்கள் நமக்கானவர்கள்
என்று நம்பிக்கை தரும்
வார்த்தைகள்...

## வரிசை கட்டி நிற்கும்...

தோல்விக்குப்பின்

இனிமேல் அனைத்தும்
இப்படித்தானோ?

உரிய நேரத்தில்
செயல் முடிக்க முடியாதோ?

நம்மால் இதை
செய்ய முடியாது போய் விடுமோ?

நம் மீது பிறர் கொண்ட
நம்பிக்கை காணாமால்
போய் விடுமோ?

புதியவை புரிந்து
கொள்ளாமால்
போய் விடுமோ?
நமக்கான அங்கீகாரம்
கிடைக்காதாதோ?

என வரிசை கட்டி
தன்னம்பிக்கையை
ஆட்டம் காண வைக்கும்
'மன பயங்கள்'...

## எதற்காக?

கடந்தவைகளில்
சாதித்த பொழுதுகளில்
இன்னும் சந்தோஷப்பட்டு
இருக்க வேண்டுமோ?

சறுக்கிய பொழுதுகளில்
இவ்வளவு உடைந்து
போயிருக்க கூடாதோ?

என பின் நோக்கிய பார்வை

எதற்காக
நிகழ்காலத்திலும்
வரும் காலங்களிலும்
உணர்வுகளை
சரியாக கையாளுவதற்காக...

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



# அம்மா அப்பா மடியில

அணைச்ச தூக்கம் பிடிக்கும்.

ஆலமரத்து தூளியில தினம்
அசந்து தூங்க துடிக்கும்.

தாத்தா பாட்டி நடுவுல
துவண்டு தூங்க நெனைக்கும்.

மதிய வெயில் வெக்கையில
மரத்தோட்ட தூக்கம் அசத்தும்
நீரோடும் வாய்க்காலில் நிதம்
நீண்ட தூக்கம் இனிக்கும்.

சோளக்கொள்ள பரணசாலை
சொக்கும் தூக்கம் தாங்கும்.

ஏரி ஓட்ட பரிசல் ஆட
ஏங்கும் இன்பத் தூக்கம்.

களத்து மேட்டு கலக காத்து
கண்ணை அசைக்கும்தூக்கம்.

கட்டவண்டி ஆட்டும் ஆடல்
கலகக்கும் தூக்கம்.

பச்சப்புல்லு மெத்தையில
பதராத. நுனித்தூக்கம்.

தாழ்வார தள்ளு காத்து
தாலாட்டுத் தூக்கம்
நுரைக் கக்கும் கடல் காத்து
நிறைத் தூக்கம் காட்டும்.

மொட்டமாடி மேல் காத்து
மெத்தவிரிப்பில் தோற்கும்.

பஞ்சு மெத்த பழக்கமது
பதமாத்தான் இருக்கும்.

பசுஞ்சாணி தரத் தூக்கம்
பல்லக்கை காட்டும்.

தூக்கம் என்னும் பொக்கிசமே
துயரங்களைப் போக்கும்.

இயற்கைத் தந்த கொடையிதுவே
இனிய தூக்கமாக்கும்.

— ஹேம லதா



**நிவேதா ராஜகோபால்**
7ம் வகுப்பு, பரவாக்கோட்டை

# அந்தக்கால மனிதர்கள்

கூடத்தில் போடப்பட்டிருந்த ஈஸி சேர்களில் அமர்ந்திருந்தனர் தாத்தாவும், பாட்டியும்.

பாட்டி மடியில் பவித்ரா. அவர்களின் செல்லப் பேத்தி.

பேத்திக்கு தினமும் கதைகளைச் சொல்வார் பாட்டி. பழைய காலத்தைப் பற்றி தோண்டித் துருவி பல கேள்விகளைக் கேட்பாள் பவித்ரா. பாட்டியும் சளைக்காமல் பதில் சொல்வார்.

வழக்கம்போல் இருவரும் பேசிக்கொண்டிருக்க, சமையலறையில் வேலையில் ஈடுபட்டிருந்தாள் சீதா.

"அம்மா சீதா..." என்று தாத்தா குரல் கொடுக்க, "என்ன..?" என்று வந்து நின்றாள் அவருடைய மருமகள்.

"காபி கொண்டு வாம்மா."

இரண்டு டபராக்களில் காபியைக் கொண்டு வந்து, டொக் கென்று டீபாயின் மேல் சத்தமாய் வைத்தாள் சீதா.

"ஈஸி சேரில் மகிழ்வோடு உக்கார்ந்துக்கிட்டு ஆர்டர் கொடுக்கறதுல ஒண்ணும் கொறைச்சல் இல்ல... என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்தபடி சமையலறைக்குள் நுழைந்த சீதாவின் பின்னால் ஓடி வந்தாள் பவித்ரா.

"அம்மா.. அம்மா..."

"என்னடி..?"

"நீ மசாலா எதுல அரைக்கிறே?"

"அரைக்கும் இயந்திரத்தில்..."

"துணி எப்படி துவைக்கிறே?"

"துணிதுவைக்கும் இயந்திரத்தில்..."

"குழம்பு எதுல செய்யறே?"

"குக்கர்ல. ஆமாம், பெரிய மனுசியாட்டம் ஏன் இதையெல்லாம் கேக்கறே?" என்று கடுப்பானாள் சீதா.
"பாட்டி அந்த காலத்துல அம்மியில் மசாலா அரைச்சிருக்காங்க. கையாலேயே துணி துவைச்சிருக்காங்க. ஆட்டுக் கல்லுல மாவு ஆட்டியிருக்காங்க. உரல்ல அரிசி குத்தியிருக்காங்க. எல்லா வேலையும் கையால செஞ்சு, செஞ்சு ஓய்ஞ்சுபோன அவங்களுக்கு கடைசி காலத்துல கொஞ்சம் ஓய்வு கிடைச்சிருக்கு."

"அதுக்கு என்ன இப்ப?"

"பாட்டி போல இப்ப உன்னால வேலை செய்ய முடியுமா அம்மா?"

ஆறு வயது சிறுமி கேட்ட கேள்விக்கு ஆடிப்போனாள் சீதா.

சடார் ரென அந்த உண்மை உறைத்தது.

இனி பெரியவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும் என தீர்மானித்த சீதா, தன் அறிவுக் கண்ணைத் திறந்துவிட்ட பவித்ராவை வாரி அணைத்து முத்தமிட்டாள்.

—



மலர்மதி,
எண் 7, 8 ஆவது தெரு,
பவர் லைன் சாலை,
ஜோதி நகர், ஆவடி,
சென்னை - 600 109
கைப்பேசி: 8667417874

---

# இரகசியமாய் ஓடும் பந்தயக்குதிரைகள்

(நூல் அறிமுகம்)

குறுங்கவிதை தொகுப்பு
ஆசிரியர்: கோவை ஆனந்தன்
வெளியீடு: அனன்துரு
முதல் பதிப்பு டிசம்பர் 2024
பக்கங்கள்: 102
விலை: ரூ. 150/-

புதிய சொற்சித்திரங்கள் வழியே இதயத்தை நனைக்கும் எண்ணக் காட்சிகள்....

குறுங்கவிதை என்ற வகைமைக்கு ஜப்பான் கவிதைகளில் இலக்கணம் வகுக்கப்பட்டாலும் அதை விலக்கி புதிய பாதைகளில் சமூகத்தின் சீர்கேடுகளை மட்டுமல்லாது இயற்கையின் அளப்பறிய ரகசியத்தின் மீதான ரசனையையும் குறுங்கவிதைக்குள் புகுத்தி உவமைகளையும் உண்மைகளையும் ஒருசேரப் பொருத்திப் பார்க்கிற ஆற்றல் தமிழ் குறுங்கவிதைகளுக்கு அதிகமாகவே கிடைக்கப்பெறுகிறது.




சமூகத்தின் நகர்வுகள் மனிதர்களின் செயல்பாடுகளின் நீட்சியில் அடங்கியுள்ளது. இன்றைய செயல்கள் நாளை அவனுக்கு சரித்திரமாகவும் மாறிவிடக்கூடும்.

செயல்பாடுகளே ஒவ்வொரு மனிதனையும் தனித்துவப்படுத்தி காண்பிக்கிறது. தினந்தோறும் அரங்கேறும் எண்ணற்ற செயல்களின் வழியே மனிதன் தனக்கான முன்னேற்றத்திற்குத் தேவையான அனுபவத்தை பெறுகிறான். தன் மனதுக்கு ஒவ்வாத செயல்களின் வழியே படிப்பினையை பெறுகிறான்.

அவலத்தையோ அன்பானதொரு செயலையோ கண்டும் கடந்து விடும் எண்ணற்ற மனங்களுக்குள் யாரோ ஒருவருக்கு அந்த காட்சிகள் மனதில் ஏதோ ஒரு கேள்வியை எழுப்பி விடுகின்றன. அவரை அவை தொடர்ந்து குடைந்து கொண்டே இருக்கின்றன. தீர்வைத் தேடும் அவன் மனதின் ஆற்றாமையை எழுத்துக்கள் சரிப்படுத்தி விடுகின்றன.

ஏன் என்று கேள்வி தொடுக்க முடியாத சூழலில் கவிதைகளும் கட்டுரைகளும் கதைகளும் அவனை இளைப்பாற்றி சமநிலைக்குக் கொணர்கின்றன. சமூகத்தின் சகல விதமான செயல்பாடுகளுக்குள் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு அந்தச் சமூகத்தின் சிக்கல்களையும் பட்டியலிடும் கவிதை மனதில் அறத்தின் சீற்றமும் அன்பின் வெளிப்பாடும் ஒரு சேர அமைந்து விடுகின்றன.

அப்படியானதொரு தீர்வை நோக்கி தன்னை நகர்த்திக் கொண்டிருக்கும் கவிஞர் கோவை ஆனந்தன் அவர்களின் இரண்டாவது கவிதைத் தொகுப்பான இந்த நூலில் இயற்கையின் மீதான பிரியமும் சக மனிதர்களின் மீதான பேரன்பும் சம விகிதத்தில் கலந்து எழுதப்பட்டுள்ளன. வாழ்வு என்பது நாம் நமக்கு பிடித்தவற்றில் நம்மை தொலைப்பது மட்டுமல்ல அவற்றிலிருந்து புதிதாக ஏதேனும் ஒன்றை கண்டெடுப்பதிலும் இருக்கிறது என்பார்கள். கண்டும் காணாமல் கடந்து போகிற சமூகத்தில் காட்சிகளின் வழியேயும் அவற்றை எழுத்துகளின் வழியேயும் தனித்து அடையாளப்படுத்த முயற்சி செய்திருக்கும் இந்த நூலில் கோவை ஆனந்தன் அவர்களின் பொதுநலம் வெளிப்படுகிறது

கடல், குளம், நிலா, புத்தன், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் மதுவின் போக்கு, நெடுஞ்சாலை மரங்கள், விவசாயம், கட்சி மாறும் தொண்டர்கள், கவனிக்க மறந்த தலைவர்கள், மக்களை கேலிப் பொருளாக்கும் அரசியல்வாதிகள், பொருளாதார ஏற்றத்தாழ்வு, பாகப்பிரிவினை, பறவைகளின் வாழ்வியல், ஊழலில் திளைக்கும் அரசியல், அரசியலுக்குள் மூழ்கிய விளையாட்டு, எட்டு வழிச் சாலைகளால் ஏற்படும் பாதிப்புகள், சுற்றுச்சூழல் சீர்கேடு, காடுகளை அழிப்பதனால் ஏற்படும் விளைவுகள், பள்ளி நாட்களின் மீதான பயணங்கள், நீர் தொலைத்து தள்ளாடும் நதிகள், இயற்கையை பாழ்படுத்தும் நெகிழிகளின் ஆக்கிரமிப்புகள், இருப்பிடத்தை தொலைத்து விட்டு எதிர்காலத்தைத் தேடும் யானைகள், கூட்டுக் குடும்பத்தின் அவசியமும் இன்றைய அவலமும், எளிய மக்களை வாட்டி வதைக்கும் நாடுகளுக்கு இடையேயான போர், வறுமைகா கோடுகளின் பின்னணியில் வசதியானவர்களின் வீட்டுத் திருமணம், விளையாட்டு வீரர்களை நம்பாத அரசின் செயல்பாடுகள், இன்றைய கல்விமுறை, அலைபேசியின் ஊடுருவல், மனங்களையும் மனிதத்தையும் புறம் தள்ளும் பணத்தின் ஆதிக்கம் என இன்றைய சூழலில் ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் ஊற்றெடுக்கும் ஓராயிரம் கேள்விகளின் தொகுப்பாகவும் நிகழ்வுகளின் மீதான சமூகத்தின் கோபப்பார்வைகளின் எதிரொலியாகவும் அமைந்திருக்கின்றன நூலில் கவிதைகள்.

ஆற்றில் இறங்கினாள்
மொய்த்துக் கொண்டது
கரையில் இருந்த கண்கள்

பெண்களின் மீதான ஆண்களின்
பார்வையோடு நின்றுவிடாமல்
சமூகத்தின் செயல்பாடுகளோடு
பெண்களைப் பொருத்தும் போது சமூகம்
அவர்களை எப்படி எடை போடத்
துவங்குகிறது என்பதையும்
உணரமுடியும்.உயர்நிலைக்கு வந்தாலோ
முன்னேறி வந்தாலோ பெண்கள்
யாரையோ மயக்கி விட்டுத்தான்
வந்திருப்பார்கள் என்ற பொதுப்புத்தியின்
கண்களாகவும் இதை உணரவேண்டும்.

சிறுமியின் உண்டியல்
கைதவறி உடையும்
நேர்த்திக்கடன்

நடுத்தரக் குடும்பமோ வறுமை
நிலையிலுள்ள குடும்பமோ இத்தகு
காட்சிகள் இயல்பாக காணக்
கிடைக்கும்.

பட்ட மரங்கள்
அமரும் பறவைகள்
இரங்கல் கூட்டம்

வசந்தங்கள் வீசும்போது மட்டுமல்ல
இலையுதிர் காலத்திலும் மரத்தை
கவனிப்பதன் அவசியத்தை பறவைகள்
நமக்குக் கற்றுத் தருகின்றன.
அனுபவங்களின் வழியே உலவும்
மூத்தோரையும் நாம் பட்ட மரங்களாக
நிறுத்திவைப்பதன் காட்சியும் இதன்
வழியே காணக் கிடைக்கிறது.

ஊருக்குள் வரும் யானைகள்
காட்டைத் தேடும்
தனியார் விடுதிகள்

அவரவர் வீடு அவரவர் சொர்க்கம்
என்பார்கள். இயற்கையும் இயற்கை
சார்ந்த வனமும் எல்லோருக்கும்
சொந்தம் என்றாலும் அவற்றை
பெரும்பாலும் விலங்குகளே
முழுமையாக பயன்படுத்துகின்றன.
யானைகளின் இருப்பிடத்தை அழித்து
கட்டிடங்கள் எழுப்புவதன் மூலமும்
பாதைகளை உருவாக்குவதன் மூலமும்
இயற்கைச் சமநிலையை பாதிப்பதோடு
சுற்றுச்சூழலையும் சீரழிக்கும் மனிதனின்
பேராசை விடுதிகளைக் கட்டி
வனவிலங்குகளை வேடிக்கை பார்க்க
மக்களை அழைக்கிறது. ஆனால்
இருப்பிடம் தொலைத்த யானைகளோ
ஊருக்குள் நுழைந்து விடுகின்றன. தான்
செய்த தவற்றை உணராத மனிதன்
மேலும் மேலும் காட்டிற்குள் தனது
பாதங்களை நீட்டிக்கொண்டே
போகிறான்..

புத்துணர்வு முகாமுக்குள்
வனத்தைத் தேடும்
கோயில் யானைகள்

தனது ஆதித்திடம் எது என்பதை
காணாமலேயே நான்கு
சுவர்களுக்குள்ளும் வரும் பக்தர்களுக்கு
வழங்கும் ஆசியின் வழியாகவும்
உலகத்தை உற்றுப் பார்த்து இருக்கும்

யானைக்கு காட்டை தேடுவது பெரும்
பாடாகிப்போகிறது

மேய்ச்சல் நிலத்திலிருந்து
பசியோடு திரும்பும்
மாட்டுக்காரர் வயிறு

தான் ஆசையாக வளர்க்கும்
கால்நடைகளின் உணவுக்காக அவற்றை
மேய்க்கும் மனிதன் தன்னைத் தாண்டி
அவற்றின் மீது வைக்கும் பேரன்பும்
பிரியமுமே கவிதையை ரசிக்கும்படி
செய்து விடுகிறது

அலைபேசிக் கட்டணம்
வாயைப் பிளக்க வைக்கும்
அம்பானி வீட்டுத் திருமணம்

பணக்காரர்கள் அதிகம் நிறைந்த நாடாக
இந்தியா உருவாகி வருகிறது
ஹதீஸ்மையும் வறுமை கோட்டை
தாண்டாத மக்களின் நிலையும்
அதிகரித்து வருகிறது இந்த
ஏற்றத்தாழ்வுகளுக்கு இடையில்
மிகப்பெரிய வியாபாரத்தை துவங்கி
அதன் வழியாக மக்களிடம் இருந்து
அலைபேசி கட்டணத்தை பெற்ற
தொழிலதிபரின் வீட்டு திருமணத்தையும்
அது நடைபெற்ற கோலாகல
நிகழ்வையும் நமக்கு
காட்சிப்படுத்துகிறது இந்தக் கவிதை.

பிரசவ வலி
பாடாய்படுத்தும்
மருத்துவ பரிசோதனைகள்

மருத்துவ வசதிகள் பெருகிவரும்
இன்றைய காலகட்டத்திலும் அதிகளவு
மருந்துகள் பயன்பாட்டிற்கு வந்திருக்கும்
சூழலிலும் பிரசவம் என்பது
பெண்ணிற்கான பேரின்பமாக
அமைவதில்லை என்றும். இரண்டாம்
பிறப்பு என்று சொல்லப்படும்
பிரசவத்தின் வலியையும்
வேதனையையும் காட்சிப்படுத்தும் இந்த
கவிதை மருத்துவ பரிசோதனைகளின்
நிலையையும் உணர்த்தி விடுகிறது

பண்டிகை காலம்
நாளெல்லாம் பாடாய்ப்படுத்தும்
விற்பனையாளர் வேலை

உழைப்பாளர்களின் அவலத்தை இப்படி
பொட்டில் அடித்தார் போல சொல்வது
என்பது அவ்வளவு சுலபம் அல்ல.
ஒவ்வொரு துணிக்கடையிலும் பண்டிகை
காலங்கள் வரும் போது அலைமோதும்
மக்கள் கூட்டத்தை பார்த்து நாம்
ரசிக்கிறோம். அதேசமயம் ஒரு நாள்
முழுவதும் 12 மணி நேரத்திற்கு மேலாக
நின்று அவர்களுக்கு ஆடைகளை
எடுத்துக் காண்பிக்கும்
விற்பனையாளரின் பணியை என்றாவது
நாம் எண்ணிப் பார்ப்பதுண்டா?
அவர்களது வலியும் வேதனையும் இந்தக்
கவிதை காட்டிக் கொடுத்து விடுகிறது.

பறவைகளின் சத்தம்
இரசிக்கும்படி இல்லை
லாரியில் மரங்கள்

தன்னை வாழவைக்கும் தாய்மையென

மரங்களைக் கொண்டாடும்
பறவைகளுக்கு அவற்றின்
இழப்புக்களைச் தாங்க முடியாமல்
கதறலே மேலோங்கி விடுகிறது.காட்டை
அழித்து காணும் இடமெங்கும் தான்
மட்டுமே இருக்கவேண்டும் என்ற
மனிதனின் பேராசை இறுதியில்
எல்லாவற்றையும் இழந்துவிடும்
நிலையை எட்டி விடும். அப்போது
பறவைகள் வாழும்.ஆனால் பார்த்து
மகிழ்ந்திட நாம்தான்
இருக்கப்போவதில்லை என்பதை
பறவைகளின் கதறல் காட்டி விடுகிறது.

பரம்பரை வீடு
கவனிப்பாரற்றுக் கிடக்கும் தாத்தாவின்
உயில்

வாரிசுகள் அவரவர் வழியில்
நகர்ந்திடும்போது பரம்பரை வீட்டை
கவனிப்பதன் அவசியம் காணாமல்
போகிறது. பிறகு யார் தாத்தாவைப்
பார்ப்பார்கள்? வேக யுகத்தில்
குடும்பங்கள் சிதைந்து தனித்தனி
வாழ்வாக மாறிப்போன நிலையில்
வீட்டைக் கவனிப்பது அவ்வளவு
எளிதான செயல் அல்ல.

விளையாட்டுப் போட்டிகளில்
பணக்கட்டுகளுடன் ரகசியமாய் ஓடும்
பந்தயக்குதிரைகள்

திறமையும் உழைப்பும் விடாமுயற்சியும்
இருக்கும் வீரனுக்கு விளையாட்டின்
எல்லாவித வெற்றிகளும் கை
வரவேண்டும். ஆனால் இன்றைய
அரசியலிலும் சூழலிலும் திறமை
பின்னுக்குத் தள்ளப்பட்டு பணமும்
அதிகாரமும் முன்னிறுத்தும் குதிரைகளே
ஓடிக் கொண்டிருக்கின்றன. ஏன் எதற்கு
என்ற சிந்தனையே இல்லாமல்
ஓடிக்கொண்டிருக்கும் மனிதனையும்
பந்தயத்தில் சேர்த்துவிட்டு வேடிக்கை
பார்க்கிறது வாழ்க்கை. ஓய்வில் திரும்பிப்
பார்க்கும்போது பெற்றதைவிட
இழந்தவையே அதிகம் என்பதையும்
பந்தயம் கோடிட்டுக் காட்டுகிறது.

பிள்ளையில்லா வீடு
சலனமற்றுக் கிடக்கும்
விளையாட்டு பொம்மைகள்

இல்லறத்தின் மாபெரும் பேரின்பமாக
மழலைகளைக் கொஞ்சி மகிழும்
தருணத்தை திருவள்ளுவர்
காலத்திலிருந்து ரசிக்கிறோம். வீடு
அடையும் நிகழ்கால சொர்க்கமே
குழந்தைகளின் நடமாட்டமே.வாரிசுகள்
கால் பரவாத வீடுகளில் பொம்மைகள்
மட்டுமா சலனமற்றுக் கிடக்கின்றன.?
மனிதர்களும் தானே.

புது வீட்டுச் சுவர்கள்
கறைபடாமல் பளிச்சென்று இருக்கும்
விடுதியில் பிள்ளைகள்

சுவர்களே ஒன்றையொன்று தங்களுக்குள்
பேசிக் கொள்ளும் சூழலில்
பிள்ளைகளற்ற வீடு பேச்சு மூச்சில்லாமல்
இருக்கும் அமைதியை நாம் மயான
அமைதியாகத்தான் பார்க்க முடியும்.

சாவு வீடு
யாரும் அழவில்லை
பேரத்தில் ஒப்பாரிக் கிழவிகள்

ரத்தமும் சதையுமாக நம்முன் நடமாடி நம்மை உயிர்ப்பிக்கும் உறவினர்களது இறப்பை இன்றைய சூழலில் எப்படி நாம் அஞ்சலி செலுத்தி மரியாதை தருகிறோம் என்பதை விவரிக்கும் கவிதையில் ஒப்புக் சொல்லி அழவும் பேரம் பேசும் காலச்சூழலே நிலவுகிறது. இன்னும் சில காலத்தில் ஒப்பாரியும் இருக்காது. அழுகையும் இருக்காது. இறப்பு நிகழ்ந்ததென்பதே தெரியாத தடமாக மாறிவிடும் காலத்தை நோக்கிச் செல்கிறோம்.

இயற்கையும் இயற்கை வழியான ரசனைகளையும் அழகான காட்சிகளாகவும் ஊமைகளாகவும் வெளிப்படுத்தும் மனதிற்குள் சமூகத்தின் அவலங்கள் மீதான கோபமும் சீற்றமும் அதிகமாகவே காணக் கிடைக்கின்றன. தொடர் வாசிப்பிலும் விறுவிறுப்பான சொற்சித்திரங்களாலும் குறுங் கவிதைகள் வழியே புதிய பார்வையை நமக்குள் விதைத்துச் சென்றிருக்கும் இரகசியமாய் ஓடும் பந்தயக் குதிரைகள் எல்லோரது பயணத்திலும் உடன் வந்து புதிய புதிய எண்ணச் சிதறல்களை உருவாக்கி விடுகின்றன.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



---

# பேருந்தில் பயணச்சீட்டு

வாங்கி
சன்னலோரம் அமர்ந்ததும்
இலவசமாக பயணிக்கிறது
உன் நினைவுகள்.

-----

## மிதிவண்டியில்

உன் தெருவுக்குள்
பிரவேசிக்கும் போது
உன் வீட்டை நோக்கி
அனிச்சையாய்
தலை திரும்புவது
காதல் விசை.

—

மீ. யூசுப் ஜாகிர்
20, மக்தும் மரைக்காயர் 2வது தெரு,
வந்தவாசி - 604408

# எத்தனையோ

ஆனி போய் ஆடி போய்
ஆவணிகள் கடந்து விட்டன
அம்மாவின் நம்பிக்கை மட்டும்
இன்னும் அப்படியே இருக்கிறது
பிள்ளை டாப்பில் வந்து விடுவான்

*******

நீங்கள் என் மீது
வீசியெறிந்த முட்களை
பத்திரப்படுத்தி வைத்துக்
காத்திருக்கிறேன்
மீண்டும் ஓர் நாள்
உங்களிடமே கையளிப்பதற்காக

என்றாவது ஒரு நாள்
உங்களுக்குள் ஒரு ரோஜா
பூக்கக் கூடும்
என்கிற பெருநம்பிக்கையில

—

பி. ஹேமா,
முசிறி.



லெக்ஷ்மி ஸ்ரீ எல்,
5 ஆம் வகுப்பு, கேவி பள்ளி



மா. நிரல்யா,
இரண்டாம் வகுப்பு, சிங்கப்பூர்.

# மனுசப் பசப்பு

அம்மாவை உயர்த்த
அப்பாவைத் திட்டு
அண்ணனைத் திருத்த
தம்பியைக் காட்டு
மற்ற நாளைக் கடத்த
ஞாயிறு போற்று
கடவுளைத் துதிக்க
சாத்தானை சபி
பிறப்பை பூசிக்க
இறப்பை வெறு
ஒளியை ஏற்ற
இருளை இறக்கு
மனுசப் பசப்பிற்கு
பாங்குதான்
எத்தனையோ...!

## வேறு வழியில்லை

உனக்கென்னப்பா
நீ கவிஞன்
விடிய விடிய நிலா பாப்ப
சாளரத்தை திறந்து வச்சுக்கிட்டு
வானத்துல மிதப்ப
ஊர் சேர்ந்து
வீட்டுக்குள்ள நுழைஞ்சொடன
போட்டது போட்டபடி தூங்குவ
சாயந்தரமா எந்திரிக்கறதுகூட
உன் விருப்பம் தான்
எனக்கு அப்பிடியா
காலைல எட்டு மணிக்கு முறைக்கு
சொல்லிக்கொண்டே
பொட்டல இட்டிலியை பிரித்து
அவ் அவென
வாய்க்குள் போட்ட நண்பன்
சாளரத்தை இழுத்தடைத்து விட்டு
படுத்துக் கொண்டான்
தொடர்வண்டி சத்தம் இப்போது
அவனுக்கு தான்
கை தட்டிக் கொண்டிருக்கிறது

நான்தான் நானேதான்

குற்றம் சொல்வதை
நிறுத்திக் கொண்டேன்
குறை கூறுவதை
தவிர்த்து விட்டேன்
உங்களால்தான் என்று
கை காட்டுவதில்லை
காரணங்களின் சந்தில்
ஒளிந்து கொள்வதில்லை
புகார் பெட்டிகளை
உடைத்து எறிந்தாயிற்று
புறம் பேசுதலை
தலை முழுகியாயிற்று
பொய்கள் தூரமாகின
காழ்ப்பு விலகிக் கொண்டது
தீதும் நன்றும் பிறர் தர வாரா
உணர்ந்த பிறகு
நான்தான் எனக்கு ஒளி
நானேதான் எனக்கு இருள்

—

கவிஜி

# மடந்தையின் பொன்கீற்று

எல்லாவற்றையும்
எளிமையாகக் கடந்துசெல்லும்
இலாவகம் கற்றிருக்கும் நீ
என்னையும்
உன்னத என் நேயத்தையும்
நடுத்தெருவில்
அகதியாய் தவிக்கவிட்டு
இனிதாய் கடந்து போவது
எந்த நாளில் ?
எந்த நேரத்தில்?
எந்த மணித்துளியில்?

## கண்ணாடி பொம்மை

நீயின்றி ஒருநொடியும்
பிழைக்கும் வழியின்றி
நான் உடைந்து போவேன்
நன்கு அறிந்திருந்தும்
குறும்பான குழந்தையிடம்
வசமாய் சிக்கிக்கொண்ட
கண்ணாடி பொம்மையென
என் இதயத்தைக் கையாண்டு
நான்நொறுங்கி சிதைவதை
அப்பட்டமாய்
வேடிக்கைப் பார்க்கிறாய்
வறண்ட அன்புடன் நீ!

## நொடியும் விலகாமல்

ஒருகணத்தில் பாதியேனும்
என்னை நினையாமல்
வாழ்வின் வளத்தினைக்
கொண்டாடி அனுபவிக்கும்
பேரழகின் திருமிகு உன்னை
செல்ல நாய்க்குட்டியென
நொடியும் விலகாமல்
சுற்றிக்கொண்டிருக்கிறேன்
பாழடைந்த அறையில்
அழுகித் துர்நாற்றம் வீசுவது
முத்தமிட்டும்
இறுகி அணைத்தும்
வசீகரித்து நீ நெகிழ்த்திய
என் மாநிற சடலம்தான்
சந்தேகம் வேண்டாம்
ஒரு சிறிதும் உனக்கு!

## யுத்தம்

நான் இங்கு
நீயற்றத் தனிமையுடன்
உயிருக்குப் போராடி
யுத்தம் நிகழ்த்துகிறேன்
நானற்ற கவலையின்றி
ஆளும் மகாராணியாய்
அரியணையில்
கால்மேல் கால்போட்டு
யாருடன் இலயித்திருக்கிறாய்?

## வஞ்சக நீ

நீயின்றி
இம்மியும் நகராத
மணித்துளிகளைப்
பரிசாக அளித்து
நானின்றி
எந்நேரமும் நலமுடன்
இயங்கிக் களிக்கும்
இனிய வரத்தினை
ஊழல் மிகுந்த
எந்த இறையை ஏமாற்றி

இலாவகமாய்ப் பெற்று
வைத்திருக்கிறாய்
வஞ்சக நீ?

## அஸ்தமனம்

நீயற்ற யாம இருளை
நத்தையின் முதுகேறி
மிகமெதுவாய் கடத்துகிறேன்
என் வருத்தங்கள்
துளியும் அறியாமல்
ஆழ்ந்துறங்கும் நெஞ்சில்
மையம் கொண்ட பேரன்பைக்
கரையில் தவழ செய்யாமல்
சூரிய உதயத்தையும்
அஸ்தமனம் செய்கிறாய்
விடாமல் பின்தொடரும்
பயணற்ற என்கால்களில்
நோயாய் அப்பியிருப்பது
உன் அலட்சியத்தின் புழுதி

## மாயபிம்பம்

பேரன்பின்
தேனருவி ஊற்றி
எனை முழுவதுமாய்த்
தண்ணென்று ஆள்வது
உன் ரம்யம் மினுக்கும்
மடந்தையின் பொன்கீற்று
வானம் திறந்து
கோடையை மகிழ்வூட்டும்
மழைத்துளிகளில் எல்லாம்
உன் தேவ நேயத்தின்
வசீகர சாயல்
அன்றலர்ந்த பூக்களின்
மாய வண்ணங்களில்
எனை நறுமணந்து ஈர்ப்பது
பைத்தியம் மிகுந்த
உன் முறுவலின்
மாயபிம்பம் அன்றி
வேறொன்றும்
அரிதாய் இல்லை

## கிளையைப் பிரியும் மலர்

ஏதோவொன்றைச்
சகிக்க மனமின்றி
எனை நிரந்தரமாய்
விலக விரும்பிய உனக்கு
கிளையைப் பிரியும் மலரென
மனமின்றி விடைதருகிறேன்
திட்டமிட்டோ
எதேச்சையாகவோ
நீயெனை வந்தடைதல்
சற்றும் சாத்தியமில்லை இனி
நீ மொத்தமும் நிரம்பியிருந்த
இதயத்தின் சுவர்களில்
ஆறாத காயங்களால் சிதைந்த
அகோர சித்திரங்கள்
என்றறிய வாய்ப்பில்லை
எப்பொழுதும் நீ!

## கருணைவற்றிய இறை

கடுகளவும் அன்பின்றிச்
சர்வ நேரமும்
எனை ஏளனம் செய்யும்
உன்னிடம் இருந்து
சிறுமலரோ
பெருமழையோ
அலைகடலோ
முழுநிலவோ
என எதுவும் வேண்டாம்
கருணைவற்றிய இறையின்

இயலாமை பக்தனாய்
இறுதிவரையில்
இருந்துவிட்டுப் போகிறேன்
நலிவுடன் நான்.

## காரணம்

என்னை நேசிக்க
காரணம் ஒன்றுமே
சொல்லத் தெரியாத
நீயேதான்
என்னை வெறுத்து விலக
ஆயிரம் காரணங்களை
மழையென
ஆறேன
கடலென
காற்றென
மலையென
அடுக்கி வைத்திருக்கிறாய்
குப்பைத்தொட்டியில்
வீசியெறிந்த
அனாதைக் குழந்தையென
வாழ்வதற்குப்
போராடிக் கொண்டிருக்கிறேன்
நீ முற்றிலும் கைவிட்ட
துயர்மிகு நான்!

## நிராகரிப்பு

அன்றலர்ந்த ரோஜாவின்
மெல்லிய இதத்தோடு
தெய்வீகமாய் உனைக்
கைகளில் ஏந்துகிறேன்
நீ நிராகரிப்பின்
கூரிய முட்களால் ஆழக்கீறி
வடியும் குருதியில்
நீராடி இனிக்கிறாய்

மழையற்ற மேகங்களை
வெறித்து நோக்குவதைவிட
தொப்பரையாய் நனைந்து
கொண்டாடவா இயலும்
நீயின்றிப் பரிதவிக்கும் நான்!

## நீ வரும் வழி

துளியும் கனிவற்ற
இந்த விடியலைக்
கண்ணீருடன் தான்
துவங்குகிறேன்
இன்னும் பல
காயங்களைப் பரிசளித்து
என் துயரக்கடலில்
மூழ்கி விளையாட
வா அருகில்
பொம்மையை விரும்பும்
சிறுபிள்ளையாய்
ஆவலுடன் காத்திருக்கிறேன்
நீ வரும் வழியில் !

## கொடூர நாவு

பெருகிவழியும்
என் கண்ணீரை அருந்தி
மிக எளிதாய்
தாகம் தீர்த்துக்கொள்கிறது
உன் அலட்சியத்தின்
கொடூர நாவு
நான் வறண்ட நிலத்தில்
வானுக்கும் மண்ணுக்குமாய்
சூறாவளியாகித்
தாண்டவமாடுகிறேன்
கடவுளின் அருளற்ற கரமாய்
நேயம் தீர்ந்த
வெற்று நெகிழிக்குடம் நீ

## சிலுவை

சாதாரண என்னை
உன் நேயத்தின் கிருபையால்
உன்னத தேவனாக்கிய நீயேதான்
முட்கீரிடம் சூட்டி
நரம்புகள் அறுந்து
சிலுவையில் அறைந்து
மெல்ல உயிர்கசிந்து
துடிதுடித்துச் சாவதை
என்னை விலகி
வேடிக்கையும் பார்க்கின்றாய்

## வெறுமை

உன் அலட்சியத்தின் தீயில்
உயிரோடு எரிந்துகொண்டிருக்கிறேன்
கருகிப் பொசுங்கிய
என் இதயத்தின் சாம்பலை
வாரியெடுத்து
உன் அங்கமெங்கும் பூசி
பேரழகோடு இன்னும் மிளிர்
நான் சுடுகாட்டின் வெறுமையோடு
பேயாகி அலைகிறேன்.

## துயரத்தின் பரிசு

நீ எளிதாய் வழங்கிய
ஏமாற்றத்தின் கொடிய வலியால்
கொள்ளிக்குடமாய் இதயம்
தூளாகிச் சிதறியது
விழிகளில் பெருகிடும்
கண்ணீரின் மழையில்
நீ நனைதல் வாய்ப்பில்லை
உயிரென விரும்பியதற்காய்
நான் அடைய வேண்டியது
வாழும் காலம் அனைத்தும்
துயரத்தின் சிறந்த பரிசு

—

பொன். தெய்வா,
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.



# நிறைவேறாத ஆசை

தூரத்தில் மின்னும் நிலாவைப் போல,
தென்றலாய் வந்து வருடிச் செல்வதாய்,
கரைகளைக் கண்டும் சேர முடியாத
ஒரு அலையாய் வாழ்கிறது என் ஆசை.

கண்கள் கனவோடு பேசும் நேரம்,
மனதில் ஒரு கேள்வி எழுந்திட நேரும்,
"ஏன் இந்த ஆசை என் இதயத்தில்?
இது நிறைவேறாமல் போனதான் ஏன்?"

வலியாக இருந்தும் வலிமை தரும்,
நிசம் போல வாழ்ந்த ஒரு கனவு,
நினைவுகளாய் வாழும் அந்த ஆசை,
நிறைவேறாததாலே என்றும் அழகு..

—

கோ. தனுசன்.

# கற்பி,
# ஒன்று சேர்,
# புரட்சிச் செய் !

*

கடவுளை மற,
மனிதனை நினை !
*

கொள்கையில் நேர்மை,
பொது வாழ்வில் தூய்மை,
லட்சியத்தில் உறுதி !

*

அடங்க மறு,
அத்து மீறு,

*

கடமை,
கண்ணியம்,
கட்டுபாடு,

*

நமது வெற்றியை நாளையச் சரித்திரம் சொல்லும் !
இப்படைத் தோற்கின் எப்படை வெல்லும் !

*

தேசியமும், தெய்வீகமும்
இரு கண்கள் !

*

இயன்றதைச் செய்வோம்.,
இல்லாதவற்க்கே !

*

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு
இல்லாமை இல்லை என்கிற நிலை வேண்டும்!

*

உழைப்பவரே உயர்தவர் !

*

கல்லாமையை இல்லாமையாக்குவோம் !

*

தன்னடக்கம்,
தன்னம்பிக்கை,
தனி வழி !

*

தூங்காமை,
கல்வி,
துணிவுடமை !

*

உழைத்திடு,
உயர்ந்திடு !

*

மண்ணும் பயனுற வேண்டும் !

*

வீழ்ந்து விடாதே வீரம்,
மண்டியிடாதே மானம் !
*

உன்னால் முடியும் !
*

என ஏதோக் கவிதை வரிகளின் எச்சமே

அனைத்துக் கட்சிகளையும்
இன்னும்
ஆட்சிச் செய்துக் கொண்டிருக்கிறது....

*

கடலைக்காட்டை விட்டு
வெளியே வந்து
சாலையில் ஓடும் முயல்...
இரு சக்கர வாகனத்தில்
நானும்
ஒரு சமத்துவப் பயணத்தை
உணர்ந்தேன்...

*

இங்கு வீரியம் உள்ள
விதைகளே மரமாகிறது...
கவிதையும்
வீரியம் உள்ள விதைகளே...

*

அரசியல்வாதியாய் ஆகலாம்முன்னு
நினைத்தேன்
ஆனால்
சொந்தக்காரங்க நல்லதுக்குக் கூட
போக முடிவதில்லை..

தொழில்முனைவோராக வரலாம்
என்று முயற்சித்தேன்
ஏற்கனவே ஐந்து, பத்துக்
கொடுத்ததைக் கூட
இன்னும் வாங்க முடியவில்லை,
செருப்பு தேய்ந்தது தான் மிச்சம் ,

மிகப் பெரிய வியாபாரியாகலாம்
என்றும் எண்ணினேன்,
ஆனால் பாருங்க,
ஏழு மணிக்கு மேல் தான்
உறக்கம் தெளிய முடிகிறது,

புள்ளி விபர புலியாகலாம் ன்னு
நினைத்தேன்,
ஸ்டாண்டில் விட்ட
சொந்த வாகனத்தின்
நான்கிலக்க எண்களைக் கூட
நினைவில் கொள்ள முடிவதில்லை,

ஆயிரம் பக்கங்கள் கொண்ட
அபூர்வ நாவல் ஒன்று
எழுதலாம் என்று ஆரம்பித்தேன்
இடப் புள்ளியா ?
வலப் புள்ளியா?
என்று இடர்கிறேன்,
எழுது கோலைக் கீழே
வைக்கும் போது தான்
பார்க்கிறேன்...

சித்தேறும்புக் கூட
விரல் வைத்து மறித்தால்
செல்லும் திசையை மாற்றுவதில்லை..

—

இரா. மதிராஜ்,
(டிஎம்இ, எம்பிஏ)
புதிய எண் 3/79, அலப்பட்சாக்
கவுண்டன் புதூர்,
காடையூர் அஞ்சல்,
காங்கேயம் - 638701.
அலைப்பேசி எண்: 9788475722

# பா வகை: மருட்பா

(பிறப்பும் சிறப்பும்)

பிறப்பும் சிறப்பும் பிறரால் பெரிதே
சிறப்பென வாழ்ந்திடுச் சீராய் இனிதே
அறத்தினை வாழ்வில் அழகெனக் கொள்வாய்
உறவினில் என்றும் உரிமை- சிறப்பாய்
மறவமே சூழ்ச்சியை மாண்பென வெல்லும்
திறமையில் என்றுமே திண்ணமாய் ஓங்கி
பிறப்பால் பெறுவோம் பெருமை
அறத்தினைக் காப்போம் அறிவினைக் கற்றே!

நிலத்திலே சூழ்ச்சியை நீயும் அறிவாய்!
குலத்தின் பெருமை குணமே அறியும்!
உலகிலே வாழ்வை உயர்வென வாழ்வாய்
நலமென என்றும் நயமாய்- உலகில்
உடலும் மனத்திலும் உண்மையைக் கொண்டே
கடலின் அலையிலே கற்பாய் முயற்சி
படரும் வெளிச்சமே பாரீர்
நடந்திடும் சூழ்ச்சியும் நாளும் வீழ்கவே!

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.





# நேரம் கிடைக்கும்

போதெல்லாம்
கவிதையெழுதுகிறேன்,
நேரம் கிடைக்கும்
போதெல்லாம்
மட்டைப்பந்து விளையாடுகிறேன்,
நேரம் கிடைக்கும்
போதெல்லாம்
வீட்டை சுத்தம் செய்கிறேன்,
நேரம் கிடைக்கும்
போதெல்லாம்
என்னால் இயன்ற உதவிகளை பிறருக்கு
செய்கிறேன்,
நேரம் கிடைக்கும் போதெல்லாம்
எதிர்வீட்டு குழந்தையிடம்
பேசிக்கொள்கிறேன்,
நேரம் கிடைத்தாலும் கிடைக்க விட்டாலும்
என் அலைபேசி அழைப்புக்காக காத்திருக்கும்
அம்மாவிடம் பேசத் தவறுவதில்லை!

—

மு. முபாரக்,
திருச்சி.

# புன்னகைப்போம் புது இரத்தத்தோடு!

நிஜங்களால் கருத்த
முகமூடிகளின் முகத்தில்...
மென்கோடாய் புன்னகை
அது கருணையுடன் உதடுகளில்
கவி நடனமாடுகிறது.
அது தன்
சொந்த மொழியைப் பேசுகிறது,
மகிழ்ச்சியான ஒரு தொனியில்...
நம்பிக்கையின் மினுமினுப்போடு,
வழிகாட்டும் ஒளி...
அது இதயத்தின் ரகசியங்களை
முணுமுணுக்கிறது...
அன்பு மற்றும் இரக்கம்,
மகிழ்ச்சியை அளிக்கிறது.
அது இடைவெளிகளைக் குறைக்கிறது,
ஆன்மாவைக் குணப்படுத்துகிறது,
இது உடைந்த இதயங்களை
முழுமையாக்குகிறது.
ஆக...
புன்னகைப்போம்
புது இரத்தத்தோடு!
தன்முனைக் கவிதைகள்

எத்துனை அலைகள்
எதுவும் கரைக்கவில்லை
துன்ப அலைகளால்
துவளாக் கரைகளாவோம்
கோழித் தூக்கம் போட்டேன்
அதிலும் நீ முட்டையாய்
அடை காக்கவும் முடியாமல்
பொரிக்கவும் இயலாமல்
எப்படித் தூவுகிறாய்
இப்படிப் புன்னகையை



மழை நின்ற வயலாய்
மனதினில் கிளர்ச்சி
ஆணி வேராய்
உன் ஆறுதல்கள்
உன் கோபங்களை
சருகுகளாய் உதிர்க்கிறேன்
கொஞ்சம் இசை
நிறைய கவிதை
பூக்கும் இரவுகள்
தொலையும் பகல்கள்

*- ராஜூ ஆரோக்கியசாமி*

*1936, மதுராபுரி நகர்,*
*பிக்சாண்டார் கோவில் (அ),*
*மண்ணச்சநல்லூர்.*

# நேற்றைய நினைவுகள்



நாளைய கனவுகள்
இவற்றிடையில் நகரும் பார்வையாளர்கள்
நாம்
ஏதோ ஒன்றை
அனுதினமும் தேடி
ஏதோ ஒன்றை
அனுதினமும் தொலைத்து
ஏதோ ஒருநாளில் புன்னகைத்து
ஏதோ ஒருநாளில் கவலையோடு
கடந்து
முடிக்கும் நாம்
என்றோ ஒருநாளில்
தொலைத்த நம்மை இன்று கவிதைகளில்
பிரகாசிக்க செய்கிறோம்.....

*- ச. சத்தியபானு*

# மென்முறை – நூல் வாசிப்பனுபவம்

நூல்: மென்முறை
வகை: குருபுதினம்
நூலாசிரியர்: நாராயணி கண்ணகி
நூல் வெளியீடு: யாவரும் பதிப்பகம்
பக்கங்கள்: 98
விலை: ரூ. 110/-

எழுத்தாளர் நாராயணி கண்ணகி அவருடைய சமீபத்தில் வெளியாகிய அலர் புதினம் நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது .

அதற்கு முன்பாக வெளியான வாதி புதினமும் மிக பெரிய வரவேற்ப்பை பெற்றது என்பது குறிப்பிடதக்கது... இந்த புதினத்திற்கெல்லாம் முன்னதாக வந்தது தான் இந்த மென்முறை புதினம்.

வாருங்கள் புதினத்திற்குள் நுழைவோம்.

கடைசி தோசையை வட்டமாக வார்க்காமல் சதுரமாக வீட்டுமனை மாதிரி வார்த்தேன் இந்த வீட்டில் இது கடைசி உணவு குட்டி லாரிக்கு சொல்லி விட்டேன் ஐந்து மணிக்கு வந்து விடும் .

சாமான்களை ஏற்ற வேண்டியது தான் எல்லா பொருள்களையும் கட்டி வைத்து விட்டோம் புது வீட்டில் இன்றைக்கு சமைக்க முடியாது நாளைக்கு விடியற்காலை பிரம்ம முகூர்த்தத்தில் பால் பொங்கி விட்டு அதன் பிறகு தான் சமைக்க வேண்டும். ஒவ்வொரு வீடு மாறும் போதும் அது தான் சநபிரதாயம்




குழந்தைகள் நாலரைக்கு வந்து விடுவார்கள் காய்ச்சின பால் இருக்கிறது இரண்டு சிறு கரண்டி அளவு சர்க்கரையை கலக்கிக் கொடுத்தால் அது போதும் மறுபடியும் எட்டு மணி வரை பசிப்பதாக சொல்ல மாட்டார்கள். அந்த வீட்டில் தோசை சாப்பிட்டுக் கொள்ளலாம் டப்பாவில் போட்டு எடுத்துக் கொண்டால் ஆயிற்று.

அது என்ன புடவையிலோ நைட்டியிலோ போர்வையிலோ ரோசாப்பூக்கள் வரைகிறவர்கள் செடி வரையாமல் கொடியில் பூக்கிற மாதிரி வரைகிறார்கள். ரோசாப்பூ முகம் உடல் என்ன கொடியா செடியா ஆராய்ச்சி பண்ணும் யோசனையில் அருகேப் போனால் துப்புவாள்.

பிரேமாவுக்கு இடப்பெயர்ச்சி பிடிக்கவில்லை அதுவும் அடிக்கடி. இது என்ன வாழ்க்கை செடி மாதிரியும் இல்லாமல் மரம் மாதிரியும் இல்லாமல் கொடி மாதிரி அங்கங்கே படர்ந்து கொண்டு திரிவது வாழ்க்கையா பிடிங்கி போடுகிற வாழ்க்கை. மரம் போல் நிரந்தரமாக வாழ வேண்டும் ஒரே இடத்தில் பல நூறு வருடங்கள் வாழ வேண்டும். அடையாளத்தோடு வாழ வேண்டும் அடிக்கடி வீட்டை மாற்றி வேலையை மாற்றி பள்ளிக்கூடம் மாற்றி என்ன வாழ்க்கை.

என்று அவள் பேசுவதும்…

வீடு என்பது ஒரு மனிதனின் அடையாளம் நிரந்தமான அடையாளம் அதை சேர்த்துவைக்க ஒருவன் எவ்வளவு போராட வேண்டியிருக்கிறது. வாடகை வீட்டில் வசிப்பவர்களுக்கு தான் தெரியும் எவ்வளவு கொடுமைகளை அனுபவிக்கிறார்கள் என்று. ஒவ்வொரு வரிகளிலும் நம்மை உணர்ந்து கதையோடு நகர்த்திசெல்ல வைக்கிறார்..

அடுத்தத்து கதை எந்த பிசிறும் இல்லாமல் ஒரே நேர்க்கோட்டில் பயணிக்கிறது..

முந்தானை முடிப்புகளுக்கும் ரவிக்கைக்கும் சேர்த்து ஊக்கை மாட்டிக் கொண்டு திரும்பினால் ஒல குடிசையின்னாலும் சொந்தமா இருக்கணும் இன்னும் எத்தனை வூடு மாறணுமோ வேதனையா இருக்கு.

தோசையை காலை உணவு பெட்டியில் மடிச்சு வைக்கட்டுமா பேப்பர்ல சுத்தி காட்டுமா.

என்னவோ செய்ப்பா, தொண்டையில இறங்கவா போகுது. வூடு பழக்கத்துக்கு வரணும்னா 10, 15 நாள் ஆச்சும் ஆகும் பசங்க சாப்பிட்டா போதும் நாம இருக்கும்போது எதனா தாவு வாங்கி வீடு கட்டணும் பசங்களை நடுத்தெருவுல வுட்டுட்டு போறமோ கட்றமோ மல்லிகைப்பூவை மூன்று சரமாய் மடித்து தலையில் வைத்துக் கொண்டாள்.

ஆண்களுக்கு வேறு குணம் பெண்களுக்கு வேறு குணம் என்று பலமுறை அறிந்திருக்கிறேன் ஆண்கள் தற்காலிக சுகபோகங்களுக்கு ஆட்பட்டவர்கள் பெண்கள் நிரந்தர சுகபோகங்களுக்கு ஆட்பட்டவர்கள் ஆணின் உடல் வேட்கை அந்த சில கணங்களில் ஒரு பம்பரம் மாதிரி சுழன்று சாய்ந்து விடும் பெண் பூமி மாதிரி சுழற்சி நிறுத்தாதவள். வயிற்றில் கரு சுமந்து ஈன்று வளர்த்து அழகு ஊட்டுபவள் வாழ்வை ஆலமரம் போல் மண்ணில் வேரூன்றி நிறுத்துபவள்.

கண்ணாடியில் தெரிந்த என்னை கண்ணாடியிலே பார்த்தாள் கண்ணாடி மட்டும் இல்லை என்றால் பல மனையரசிகள் மன நோயாளிகளாக திரிவார்கள்.

மனம் அவளை நெருங்கி அணைத்து நெருக்கி, இறுக்கி, முறுக்கி சல்லாபம் கொண்டது. வூடு வேணும்னு எனக்கு ஆசை இல்லையா. கம்மியாவா விக்குது அஞ்சு லட்சம் 10 லட்சம் என்கிறார்கள் தெரியுது இல்ல. ஆமா அதைத்தான் சொல்றேன் அஞ்சாயிரம் பத்தாயிரம் கெடச்சப்போ வாங்கல இப்போ லட்சத்துலயும் வாங்கலன்னா கோடிக்கு போயிரும் ..
அந்தந்த காலத்துக்கு அந்தந்த வெல அஞ்சாயிரம்னு வெல இருந்தாப்போ 500 சேர்த்து முடியல இப்போ அஞ்சு ஆயிரம் முடியும் ட்ரை பண்ணா பத்தாயிரம் முடியும் அஞ்சு லட்சம் முடியாது நம்மால் 5 லட்சம் முடியறப்போ வூட்டுமனை 50 லட்சம் போயிரும்.

எனக்கு பிடித்த சில வரிகளை பகிர்கிறேன்.

இந்த வீட்டிற்கு வந்த பிறகு தான் பிரேமா டெய்லரிங்கில் புகுந்தாள் . என் சம்பளத்தை விட அவளுடைய வருமானம் அதிகம் ஆனால் ரவிக்கை தைத்து எந்த புலவராலும் பெயர் வாங்க முடியாது.

கைநீளம் இடுப்பு இறக்கம் வைக்கல இன்னும் கொஞ்சம் டைட் பண்ணனும் என்ற குற்றங்களே வரும். பொறுமை அதிகம் வேணும் பிரேமா பொறுமைக்காரி போட்டு காண்பிங்க அக்கா நானே என்னென்ன பால்ட்டுன்னு பார்த்துடறேன், என்பாள்.
நான் வீட்டை விட்டு வெளியே வந்து விடுவேன் வாடிக்கையாளர் போன பிறகு வீட்டிற்குள் நுழைந்ததும் புலம்புவாள்.
தாவணி பாவாடை ஒழிஞ்ச மாதிரி புடவை ஜாக்கெட்டும் ஒழியனும் எல்லாம் சுடிதார் தான் போடணும்னு பிரதமர் சட்டம் போடணும் ...
ஒரு பிளவுஸ் அடிக்கிற நேரம் இரண்டு செட் சுடிதார் அடிச்சிடுவேன் ஜாக்கெட் நல்லா அமையணும்னா, உடம்பு நல்லா அமையணும், தையல்காரரிடம் வந்து சண்டை பிடிப்பார்கள் கடவுள் கிட்ட போய் சண்டை போட வேண்டியதுதானே என்னை ஏம்பா எலும்பு தோலுமா படைச்ச கடவுளேன்னு கேட்க வேண்டியதுதானே ..

இப்படி கதை ஒவ்வொரு நகர்வாக நகர்கிறது புத்தகத்தை வாசிக்க வாசிக்க ஒவ்வொரு வரியிலும் ஒரு தொடர் சங்கிலி போல அமைந்திருக்கிறது .

ஜிஏ வீட்டிற்கு எதிரில் வாடகை வீட்டிற்கு செல்வதும் அங்கே நடக்கும் கூத்துகளும் ஜிஏ ஒரு நாள் ஒரு காவலரை நெல்லி மரத்தில் கட்டி வைத்து அடிப்பதும் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு நியாயம் வாங்கித் தருவதும் என பல விசயங்கள் செய்து வரும் ஜிஏ. ஒரு கட்டத்தில் நல்லவரா கெட்டவரா என யோசிக்க வைக்கிறது.

வீட்டில் மனைவியிடம் கொஞ்சலுடன் பேசுவதும்.

வீட்டிற்குள்ளிருந்து சாளரம் வழியாக ஜிஏ வை பார்த்து பயப்படுவதும் ஜிஏ நடராஜை அழைத்து பேசுவதும் பயத்துடனே நடராஜு செல்வதும். கதை பரபரப்பாகவும் சுவாரசியமாகவும் நகர்கிறது. நூலை வாசிக்க வாசிக்க வரியை விட்டு இம்மியளவும் நகர்ந்து எழுந்து செல்லவே முடியவில்லை.

நாவல் கதை எழுதும் அனைவருக்கும் இது ஒரு நல்ல தீனியாக இருக்கும். எல்லோருக்கும் பிடித்தமான ஒரு நூலாக இந்த நூல் அமைந்திருக்கிறது அனைவரும் வாங்கி வாசிக்க வேண்டிய ஒரு நூல்...

- ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்,
கைப்பேசி: 8867933021

# முருகனே இனிமை

முருகா முருகா என்றாலும் இனிமை,
பன்னிருக்கை வேலவனே உன் பார்வை
இனிமை!

அன்னை சிவகாமி மைந்தனே இனிமை,
நாராயணன் தங்கை மகனே நீ இனிமை!

ஆனைமுகத்தான் தம்பியே இனிமை,
முக்கண்ணன் மகனே நீ என்றும்
இனிமை!

பழனியம்பதியில் நீ நிற்பதே இனிமை,
கையில் வேலோடு சிரிப்பதே இனிமை!

மயிலோடு நீ அமர்வதே இனிமை,
உலகில் வாழும் உயிர்க்கெல்லாம் நீ
இனிமை!

வினையால் மெலிந்தோரை காப்பதே
இனிமை,
விடத்தால் மயங்கியோரை வாழ
வைப்பதே இனிமை!

தேவர் தன் மகளை ஏற்றதே இனிமை,
குறமகள் வள்ளியை மணந்ததே இனிமை!

உன் அசைவு எமக்கு என்றுமே இனிமை,
"ஓம்" எனும் மந்திரம் உன்னாலே
இனிமை!!

- எம். என். பாஸ்கரன்,
கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு)
மன்னார்குடி.



---

# நெனச்சது ஒன்னு
## (சிறுகதை)

ஒருவழியாய், சொல்லி முடித்தாயிற்று.. இனி, அவன் சொல்வதில்தான் அடுத்த கட்ட, நகர்வு இருக்கு.. ஆனாலும், இந்த செல்வனுக்கு, இத்தனை வெட்கம் கூடாது. பெண்ணாய், தான் கூட, கொஞ்சம் கூச்சத்தோடு, பேசி முடித்துவிட்டேன். எனக்கு எந்த பயமும், இல்லை. ஏன் பயப்படனும்? என் மனசுக்கு புடிச்சவனை, தனியா அவன்கிட்ட, 'உன்னை எனக்கு புடிச்சிருக்கு.. உனக்கு என்னை, புடிச்சிருக்கா' என்று, கேட்க எனக்கு என்ன கூச்சம்..? ஆனால் கொஞ்சமாய் வெட்கப்பட்டேன்...

செல்வனுக்குதான், கேட்டதிலிருந்து எதையும், பேச தோணலை. நான் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"அக்கா வேர்கடலை, வாங்கிக்கோக்கா.." சிறிய பெண், ஒரு தூக்கில் அவித்த

வேர்கடலையை, வைத்துக் கொண்டு, கெஞ்சுகிற பாவனையில் கேட்டபடி, நின்றிருந்தாள்..

"பத்து ரூபாய்க்கு தாம்மா" நான் கேட்டதும், அவள் தூக்கை கீழே வைத்தபடி, ஒரு பேப்பரை அழகாய் சுருட்டி, அதில் வேர்கடலையை போட்டுத் தந்தாள்.. பணத்தை தந்து, அந்த பொட்டலத்தை பெற்றபோது, நல்ல சூடாய் அது இருந்தது. இத்தனையையும் வேடிக்கை மட்டும், பார்த்துக் கொண்டிருந்தான் செல்வன். அந்த பெண் நகர்ந்தவுடன்,

"எடுத்துக்கோங்க செல்வன்" என்று சொல்லியபடியே, பொட்டலத்தை நீட்டினேன்.. அவன் கொஞ்சமாய், எடுத்துக் கொண்டான். அலைகள் சத்தம் மட்டும், ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்தது. கடற்கரையில் கூட்டம் குறைவாய், இருந்தது. குளிர் காலமாதலால்.. ஏழு மணிக்குள்ளாகவே, கூட்டம் கரைந்து போயிருந்தது. மங்கிய ஒளியில், நாங்களிருவர்" மட்டுமே உட்கார்ந்திருந்தோம்.

"என்ன செல்வன் அமைதி.. ?" நான் கேட்டதும்,

"ஒன்னுமில்ல சரண்யா.. நீ சொல்லிட்ட... என்னால அப்படி, உடனே பதில் சொல்ல முடியல.."

"ஏன்... என்னை புடிக்கலையா"

"அப்படி சொல்லலை... நீ சொன்னதும், என்னால எதுவும், பேச முடியலை.. இரண்டு நாள் அவகாசம் கொடேன்... சொல்றேன்"

"அப்போ அலுவலகத்துல, என்னை எப்பவும், பார்த்திட்டே இருப்பது..பேசுவதற்கு, என் மேசை பக்கம் வந்து, நிற்பது.. இதெல்லாம் சும்மாவா..? நான்தான் அவசரப்பட்டுட்டேனோ..? சரி செல்வன் கிளம்புவோம்.. அவசரமில்லை.. உங்களுக்கு, எப்போ தோணுதோ.. அப்ப சொல்லுங்க.. ப்ப போலாமா..." எழுந்து நின்றேன்.. மண்ணை உதறியபடி..

செருப்பை போட்டுக்கொண்டு, தயாராக இருந்தேன். செல்வன் கொஞ்சம் தாமதமாய் எழுந்து நின்றான்.. நான், நடக்க தொடங்கியபோது, அவன் வேகமாய், என்னோடு கூடவே வந்தான்.

"கோவமா சரண்யா.. எனக்கு உடனே சொல்லிடனும்தான் தோணுது.. ஆனா எதுவோ ஒரு யோசனை.. அதுதான்.. ரெண்டு நாள் அவகாசம் கேட்டேன்.. சாரிப்பா" நான் சிரித்தபடியே, அவனுக்கு பதில், தந்தேன்.

"பரவாயில்லை அதனால் என்ன? .." சொல்லிவிட்டு, தொடர்ந்து நடந்தேன்.

"உன்னை மாம்பலத்துல, வீட்ல வீட்றவா?"

"ஐயோ வேணாமே.. இங்கேயே நேரா பேருந்து இருக்கு.. நான் பாத்துக்குறேன்.. நீங்க பாத்து போங்க செல்வன்" சொல்லிவிட்டு, பதிலுக்கு காத்திராமல், பேருந்து நிலையம் நோக்கி, நடந்து போனேன். கடற்கரை மணலுக்குள், கால் புதைந்து, எழுந்த போதெல்லாம், என் மனமும் அதில் புதைந்து எழுந்து, புதைந்து போனது.

செல்வனும் நானும், ஒரே அலுவலகத்தில் வேலை," பார்ப்பவர்கள். எனக்கு ஒரு படி மேலே, அவனுக்கு வேலை. நான் வேலைக்கு சேர்ந்த, ஆறுமாதத்தில், என்னை அவன், வைத்த கண் வாங்காது, பார்ப்பதிலாகட்டும்.. வலிய வந்து, சில உதவிகளை செய்வதிலாகட்டும்.. ஏதாவது சாக்கு வைத்து, என் மேசைக்கு வருவதாகட்டும்.. அதை உணர்ந்த நாளிலிருந்து, அவனை நானும் ரசிக்க தொடங்கி, காதலிக்கவும் செய்துவிட்டேன். மௌன நாடகத்தை போலவே, இது நடந்தும் தொடர்ந்தும், கொண்டிருந்தது. போனவாரம், ஒருநாள் செல்வன்தான், என்னிடம் மெல்லிய குரலில், கேட்டான்.

"சரண்யா.. நீங்க யாரையாவது, காதல் பண்றிங்களா" என்று. இப்படி முகத்திலடித்தாற் போல, இவன் கேட்பானெ'ன நான் நினைக்கவில்லை. ஆனால், நான் வேறுவிதமாய்.. கேட்டேன்.

"ஏன் செல்வன் சார்.. நீங்க என்னை லவ் பண்றீங்களா" என்று.. அவன் அவசரமாய் பதறி,

"இல்லீங்க.. சும்மாதான் கேட்டேன்" என்று சொல்லிவிட்டு, அவன் டேபிளுக்கு போய் விட்டான். அவனின் பதட்டத்தை, ரசித்தபடியே நான், அவனின் 'இன்டர்காம்' நம்பரில், அழைத்தேன். அவன் எடுத்ததும்,

"என்ன சார்.. பதில் சொல்லி முடிக்கும் முன்னே.. ஓடிட்டீங்க?" சிரித்தபடி, நான் கேட்டபோது,

"சாரி சரண்யா.. நா இப்படி பட்'னு, கேட்டிருக்க கூடாது.. சாரி" என்றான்.

"சாரி'யை விடுங்க சார்.. நான் காதலிப்பேன்'னு எப்படி சொன்னீங்க.?"

"சும்மாதான் கேட்டேன் சரண்யா..சரி எனக்கு வேலை இருக்கு.. அப்புறமா பேசவா.."

"இருங்க சார்.. கையெழுத்து போடறது தானே.. உங்க வேலை..?" சரி அதை விடுங்க.. நீங்க கேட்ட வேள்விக்கு வரேன் இப்ப.. உண்மைதான் சார்.. நான் ஒருத்தர, காதலிக்கிறேன்... அவரும், காதலிக்கிறாரானு, எனக்கு தெரியலை.. இனிமே தான் தெரிஞ்சுக்கனும்.." என்றேன்.

"சரிங்க சரண்யா.. அப்புறம்

பேசுவோம்..இப்ப வேலையை பாக்கலாமா.." என சொல்லிவிட்டு, என் பதிலை எதிர் பார்க்காமல், ரிசீவரை வைத்துவிட்டு, என்னை அங்கிருந்தே, பார்த்தான். அதற்கு பிறகு, இந்த ஒரு வாரம்.. என் கூட பேசுவதையும், என் மேசை வருவதையும், குறைத்திருந்தான். அதை என்னால், தாங்க முடியவில்லை. மதியம் சாப்பிட்டு முடித்த நேரம்.. அவனருகே சென்று,

"செல்வன் சார்.. மாலை நீங்க போகும் போது.. என்னை கொஞ்சம் 'லைட் அவுஸ்' பக்கமா விட்ற, முடியுமா?" நான் கேட்டதை, எதிர்பாராத செல்வன், மறுக்க முடியாமல்,

"சரிங்க" என்றான்.. ஆறுமணி ஆனதும்.. அவனின் பைக் பின்னாடி, உட்கார்ந்து போனதை, ஆபீஸ் முழுக்க பார்த்தது. அதை பற்றியோ, அவர்களை பற்றியோ, எனக்கு எந்த கவலையுமில்லை. லைட் அவுஸ் எதிரே, நிறுத்தியவனிடம்

"உங்க கூட பேசதான் இங்க வந்தேன்.. வாங்க.. வண்டிய, 'பார்க்' பண்ணிட்டு வாங்க.. கொஞ்சம்" அலைகள்'ல, காலை நனைச்சுட்டு, நல்ல இடமா பார்த்து, உட்காருவோம்" வண்டியிலிருந்து இறங்காமல், சொன்னேன். மறுக்க இயலாத வகையில், அவன் இருந்ததால், வேறு வழியின்றி, சாலையில் சென்று, 'யூடர்ன்' போட்டு, உட்புறமாய் வண்டியை, பார்க் செய்தான். அதன் பின், நடந்த அத்தனையும், நினைத்தவாறே, காலியாய் இருந்த பஸ்சில் ஏறி, வீடு வந்து சேர்ந்தேன்.

அவசரபட்டுட்டோமோ.. இப்போது நினைத்தால், அசிங்கமாய்தான் இருக்கு.. ச்சே.. ஏன் அவசரபட்டுட்டோம்.. இதுவரை, எந்த காதலும் என்னை ஈர்க்கவில்லையே ? பள்ளி கல்லூரி வரை, யாரிடமும் மனம் மயங்கியதில்லையே.. அப்படிப்பட்ட நானா இன்று..? ஒருவனிடம், காதலைச் சொல்லியும், பதில் பெறாமல் போனேமே..? நாளை அலுவலகத்திற்கு," எப்படி போவது..? எல்லோருக்கும் விசியம் தெரிந்து விடுமா?

ஒரு பெண், தன் காதலை முதலில், சொல்வதில்லையாமே? அப்படி சொல்வது, சரியில்லை என்றும், சொல்லி கேள்விபட்டிருக்கேனே? ஆனால், அதையெல்லாம் நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லையே.. இருப்பினும்" செல்வனிடம், பதிலை பெறாமல் போனது நெஞ்சை அறுக்கிறதே..?"

இரவெல்லாம் விழித்திருந்ததில், எனக்கு தலைவலியே, வந்துவிட்டது. ஆறுமணிக்கு, எழுந்திருப்பவள்... ஏழுமணிக்குத்தான் எழுந்தேன். அம்மாதான் கேட்டாள்.

"என்னடி நல்லா.. தூங்கின.. சரி விடுமுறை போட்டுட்டியோ'ன்னு, நினைச்சேன்.. எழுப்ப தோணலை..

விடுமுறைதானே?"

"ஆமாமா.. தலையை வலிக்குது.. இன்னிக்கு, லீவு போட்டுடறேன்."

"நல்லதா போச்சு.. மாலை, இன்னிக்கு பொண்ணு பாக்க, வர்றாங்க சௌரியமா போச்சு.. " அப்பா, சொன்னதும்,"

"இதுக்கு நான் அலுவலகமே போகலாம்." சலித்துக் கொண்டே சொன்னேன்."

"ஏம்மா அப்படி சொல்ற.. காலைல ஆறுமணிக்கே," தரகர் ஒரு வரனை, கொண்டு வந்தார்.. நேர்லேயே, வந்திடறாங்களாம்.. ஏற்கனவே உன் போட்டோ கொடுத்து, வச்சிருந்ததால இன்னிக்கு மாலை, வர்றாங்களாம்.. பாரும்மா.. உனக்கு புடிச்சா சரி.. இல்லேனா.. வேணாம் சரண்யா.." அப்பாவை, வருத்தப்பட வைக்க வேண்டாம் என, நான்" நினைத்துக் கொண்டே,

"உங்க விருப்பம்பா" என்றேன்.

மதியம் ஒரு மணி போல, செல்வன் போன் செய்தான்.

"ஏன் அலுவலகம் வரலை.. உடம்புக்கு சௌரியமில்லையா..?" கேட்டவனிடம், பழி தீர்க்கும் விதமாய்.. சொன்னேன்.

"அதெல்லாம் நல்லாதான் இருக்கேன்.. இன்னிக்கு.. என்னை பொண்ணு பாக்க, வர்றாங்க அதான் லீவு, போட்டுட்டேன்." என்றேன்.. ஆனால் அவனின், பதில் எப்படியான உணர்வை, தரும் என்று.. அவனது குரலை எதிர்பார்த்து.. காத்திருந்தேன். அவனோ,

"ஓஓஓ வாழ்த்துகள்.. " என்று சொல்லிவிட்டு, போனை வைத்துவிட்டான். எனக்கு வந்த கோபத்தில், செல்லை தூக்கி மெத்தையில, வீசினேன்.
*

மாலை ஏழு மணி. தரகர் வந்து, ஒரு முறை காபியும், குடித்திருந்தார்.

"நல்லா இருக்கே பில்டர் காபி.. அவங்க வந்த உடனே.. எனக்கு திரும்ப," தராம இருக்காதீங்கம்மா.." சிரித்தபடி சொன்னார். நான் பெரிதாக, சிங்காரித்துக் கொள்ளவில்லை. தேவையுமில்லை.. என்பது என் எண்ணம். முதல் முறை தான், இந்த வைபவம்.. புதிய அனுபவம். ரொம்ப சாதாரணமாக இருப்பதாக, அம்மா வருத்தப்பட்டாள்.

"அம்மா வர்றவன், எந்த நாட்டு ராஜகுமாரனுமில்லை. நானும் இளவரசியுமில்லை.. இது போதும்.." கோபமாய் சொன்னேன்.

"உன்னை திருத்த முடியாதுடி.." அம்மா சொல்லிவிட்டு, போனாள்.
அவர்கள் வந்துவிட்ட சத்தம், தரகரின்

பெருங்குரலில், கேட்டது. பத்து நிமிடத்துக்கு பின்.. நான் கூடத்துக்கு வந்தேன். யாரையும் ஏறெடுத்து, பார்க்க மனமில்லை எனக்கு... பார்த்துவிட்டு, போகட்டும். பிடிக்கலன்'னு சொல்லிடுவோம்.. என்றபடி, உட்கார்ந்திருந்தேன்..

"மாப்பிள்ளையை பாத்துக்கம்மா.." பக்கத்து வீட்டு மாமி, சொன்னபோது, அந்த மாமியை," முறைத்து பார்த்தேன்..

'அங்க அங்க பாரு..' அவள் சாடை காட்டியும், நான் பார்க்கவில்லை..

"பொண்ணுகூட நான், அஞ்சு நிமிடம் பேசனும்.. பேசலாங்களா.." குரல் கேட்டதும், திடுக்கிட்டேன். இது செல்வனின், குரலாச்சே.. நிமிர்ந்து பார்த்தேன்.

'அட ஆமா.. மாப்பிள்ளையா, நிமிர்ந்து உட்கார்ந்திருக்கானே..'

"அதற்கென்ன மாடியில போய், பேசிட்டு வாங்க.." அப்பா அனுமதி கொடுத்தார். செல்வன் எழுந்து சென்று, படிகளில், ஏறிக்கொண்டிருந்தான். அவனுக்கு பின்னே நானும், போய் கொண்டிருந்தேன்.. மாடியில், முல்லை கொடியின் பந்தலின் கீழ், எப்போதும். 'லைட்' எரிந்திருக்கும்.. அங்கே போனோம்.. முல்லையின் வாசம், மனதையும் மகிழ, வைத்தது. அவனை பார்த்தேன். சிரித்தான்.

"ஆச்சர்யமா இருக்கா.. எனக்கும் தான்.. நீ அலுவலகம் வந்திருந்தா, பீச்சுக்கு போய் பேசலாம்'னு, இருந்தேன்.. என்னவோ நீ விடுமுறை.. சரி நாளைக்கு, பேசுவோம்'னு, இருந்துட்டேன்.. உன்னை பிடிச்சிருக்கு'னு, உன் கண்களை பார்த்து, உன்னை போலவே சொல்லனும்'னு, நெனைச்சேன்.. நேத்திக்கு சொல்ல.. கூச்சாமாயிட்டுது.. உனக்கு வந்த தைரியம்.. எனக்கு வரலை.. ஆனா நீ சிரமமா  போனதை, நான் உணர்ந்தேன்.. மே..டம்... பொண்ணுக்கு மட்டும் தான்.. கூச்சமோ வெட்கமோ, இருக்குமா..? ஆணுக்கும் இருக்கும்.. மாலை வீட்டுக்கு போன பிறகுதான், அம்மா சொன்னாங்க.. நல்லவேளை உன் ஒளிப்படம் காட்டினாங்க.. உடனே கிளம்பிட்டேன்.." இப்பவாவது, 'உன்னை புடிச்சிருக்கு'னு சொல்லலாமா.." என்றான்.

நான் மனம் முழுக்க, மகிழ்ச்சியில் திண்டாடிக் கொண்டிருந்தேன். தொடர்ந்து அவன், சொன்னான்.

"நான் உன்னை காதலிக்கிறேன் சரண்யா"

நான் கூச்சத்திலும், வெட்கத்திலும், நெளிந்து கிடந்தேன்.

—

இரவிச்சந்திரன்

# உண்மை சூட்சுமம்

இதோடு
பத்தின் மடங்கில்
ஒரு முறையாக
அந்தப் பாடலை
கேட்டாகிவிட்டது
ஒவ்வொரு முறை
கேட்கும் போதும்
வெவ்வேறு விதமான
எண்ண ஓட்டங்கள்
மனதில்
சில நாள்
உவகையின் கிளர்ச்சியாக
சில நேரம்
கலங்கி நிற்கும் கண்ணீராக
சில சமயம்
குதூகலிக்கும் குறும்படமாக
சில காலம்
கற்பனையின் கருவாக
சில பொழுது
இன்னும் இடைஞ்சலாக
இப்படி எத்தனையோ
வெளிப்பாடுகள்
ஆனால் இன்றுவரை
எந்த சூழ்நிலையிலும்
அந்தப் பாடலின்
உண்மை சூட்சுமம்
மட்டும் வெளிப்படவேயில்லை

—

நிவேதிகா பொன்னுச்சாமி

---

# வாழ்வு மாறும் நன்று

நில்லாமல் ஓடும் இவ்வுலகத்தில்
நிலையான நிகழ்வு என்பதேதுமில்லையே
பாதிவயதை கடந்து விட்டால்
பார்க்காத மாற்றங்கள்பல நிகழ்ந்தேறுமே
எதிர்காலத்தை நினைத்து பயம்வரவே
எதிராகும் சுய எண்ணங்களே
சருகாகும் மரங்கூட அழகாகும் வளமிக்க
நல் வசந்தத்தில்!

துள்ளி மிளிரும் பட்டாம்பூச்சியோ
சிறுப்புழுவாக தொடங்கியது
தன்பயணத்தை!

நிகழ்வன நிகழும் நந்நேரத்தில்
நிஜமான உழைப்பையதில் இட்டாலே
சுற்றி நிகழும் மாற்றத்தை - ஏற்றுக்கொள்!

மற்றவர்ப்பார்த்து ஒப்பிடும் வழக்கத்தை -
மாற்றிக்கொள்!

வாழ்க்கை என்பது இலக்கல்ல
புரிந்து வாழும் இயல்பு
கோடி பேருரைத்தாலும் இவை
உணர்ந்தால் மட்டுமே வசமாகும்
உன்னை நம்பு! வாழ்வு மாறும் நன்று!

—

இரா. ரம்யபாரதி,
புதுச்சேரி.

# பேசிப் பேசி கலைத்துப் போய்

காதலைச் சரணடைந்தேன்.
மௌனத்தில் தாலாட்டி
உறங்க வைக்கிறாய்.

தேடித்தேடி கவிதையில்
இளைப்பாறினேன்
வாசித்த விதத்தில்
என்னை வாழ்வித்தாய்.

ஓயாத நச்சரிப்பில் உன்னை கேள்விகளில்
துளைத்தேன்
ஒன்றுமே செய்யாது
என்னைச் சீண்டினாய்

வேலையின் களைப்பை
உன் பெயரில் கலைப்பேன்
எல்லாவற்றையும் உள்வாங்கி
ஊமை ஆவாய்

குடுப்பைக்காரனின் அவசரத்தை வாங்கி
ஓடிக்கொண்டிருக்கிறேன்
நீயோ கிழவியிடம் தடி வாங்கி
நடந்து பழகுகிறாய்

அவசர மனத்தின் துன்பங்களை
அடக்க மாட்டாது அவதிப்படுகிறேன்
அனைத்தையும் அறிந்தும்
அச்சோ என சூழ் கொட்டுகிறாய்.

காதலின் சுவையை கணப்பொழுதும்
கைவிடாது ரசிக்கத் துடிக்கிறேன்
நீயோ கடைசி வரை
மௌனத்தையே
விடையெனத் தருகிறாய்.

## தூசு

எனக்கான சாபங்கள்
பழிக்கத் தொடங்கட்டும்.
எனக்கான விரோதங்கள்
கத்தியைத் தீட்டி காத்திருக்கட்டும்.
எனக்கான குழி தோண்டல்கள்
நடந்தேறட்டும்.
எனக்கான புறக்கணிப்புகள்
அணிவகுக்கட்டும்.
எனக்கான தீண்டாமைக் கணங்கள்
நீண்டு போகட்டும்.
எனக்கான முட்டுக்கட்டைகள்
முன்னேறட்டும்.
எனக்கான தனித்துவிடப்படல்கள்
அரங்கேறட்டும்.
எனக்கான கண்ணீர் சுரப்பிகள்
அதிகரிக்கட்டும்.
எனக்கான கண்டன அறிக்கைகள்
தயாராகட்டும்.
எனக்கான கோபமுத்திரைகள்
கொதிக்கட்டும்.
எனக்கான எதிர்ப்பு ஏவுகணைகள் பாயத்
தயாராகட்டும்.
எனக்கான அதிருப்திகள்
அவை ஏறட்டும்.
காதல் நுழைந்து விட்டபின்
என்ன செய்யும் இவை?

—

இளையவன் சிவா

# இரவு

இரவு
எவ்வளவு அழகானது

விளக்கு ஏற்றுகையில்
முகத்தை மேலும்
அழகாக்குகிறது

ஒற்றை
கருப்பு சேலைத் தொட்டிலால்
எல்லா உயிர்களையும்
உறங்க வைக்கிறது

கருப்பு தீட்டு என
நினைப்போரையும்
முழுமையாக அணைத்து
புரட்சி செய்கிறது

நிலவுக் கண்ணாடியில்
சூரிய ஒளியை
அழகாக காட்டுகிறது



உலகை
பகல் காட்டட்டும்
என்னை
எனக்கு காட்டுகிறது
இரவு

சிந்தனை குழந்தைகள்
பிறந்து ஆளாவதும்
ஒற்றை இரவில் தான்

வாழ்வின் பொருளை
கற்பிக்கிறது
சத்தமில்லாமல் மறையும்
இரவு

- சா. கா. பாரதி ராஜா

---

# காலம் இனியதொரு கலவை

செலவு செய்யும் வரை வெளுக்காது
அலுக்காது...

வெயிலில் உப்பளம் அள்ளும்
தொழிலாளி
வியர்வையில் இனிக்கிறது
உப்பின் வாசம்...

அப்பா வாழ்ந்த காலத்தில் அதே
நேரத்தை காட்டியது எனக்கும் அதே
நேரத்தை காட்டுகிறது கடிகாரம்...

நீ நான் என்ற
பேதம் கழிந்து ஒன்றானோம்
நிரங்களுக்கப்பால் நிர்வாணம் என்னும்
ஒற்றை புள்ளியில்.

--

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்,
கைப்பேசி: 8867933021

# கண்ணுடிப் போர்வை

அதி காலையில் விரித்திருக்கின்றன
புற்கள்

வயதுக்கு ஏற்றார் போல
அணிய முடிவதில்லை
அடகு கடையில் நகைகள்

மன அழுத்தத்தை
இழுத்துச் செல்கிறது
அருவி

விருந்தாளிகள் வரவில்லை
சொல்லிவிட்டுச் செல்கிறது
காகம்

மெல்ல சிறகை விரித்து
நிழலாடச் செய்து விடுகிறது
கோடை விடுமுறை

பறவைகளின் சத்தம்
சற்று தொலைவில் கேட்கின்றன
தெளிந்த நீரோடை

நீரைக் கிழிக்கும் பறவை
மெல்ல நீந்துகிறது
வானம்



- பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்,
கைப்பேசி: 6380704001

---

# காரிருள்

தனசேகருக்கு ஏன் தான் இப்படி புத்தி தடுமாறியது என்று தெரியவில்லை. ஆனாலும் புத்தி எப்படியோ பிசகி விட்டது!

வயது 68ஐ கடந்து நான்கு மாதமாகிறது. அதற்காக தம்மைப் பழுத்தப் பழமாகக் காட்டிக் கொள்ளும் எண்ணம் ஒருபோதும் அவருக்கு இருந்ததில்லை. இரு பக்கமும் ஏறு நெற்றி. நடுவில் வரப்பில் மண்டிக் கிடக்கும் கோரையாக ஆளை மயக்கும் கொத்து முடி. அதேவேளையில், அங்கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளி முடி பளபளக்கும். கிழடு தட்டாத தேகம். காரணம். இன்று வரை அதிகாலையில் எழுந்து நகரின் மத்தியில் காணப்படும் நகராட்சி சார்பில் உள்ளரங்கமாக எழுப்பியுள்ள இறகு பந்து மைதானத்தில் ஆடும் ஆட்டம் தான். அதிகமில்லை. வெறும் நான்கே ஆட்டம். அதற்குள் ஆளே தொப்பலாகி விடுவார். கை, கால் மூட்டு வலி இல்லாமலும் இல்லை. விடங்கலூர் அல்லது தென்னமரக்குடி தைலத்தைத் தடவிக்கொண்டு முடிந்தவரை விளையாட வந்து விடும் பழக்கத்தாலேயே இதுவரை நீரிழிவோ, இரத்த அழுத்தமோ அவரை நெருங்க முடியவில்லை. நல்ல கட்டுக்கோப்பான உடல். நிறம் மட்டும் தான் குறை. எம்ஜிஆர் போன்று தாம் இருப்பதாக அவரே பலதடவை பீரோவில் உள்ள அழுக்கேறிய பழைய நிலைக் கண்ணாடியில் தம்மைத் தாமே காமுற்று,

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பயில்வான் சேட்டைகள் செய்து கூறுவதை கலாவதியால் பொறுத்துக் கொள்ள முடியாது.
"பாவம். நல்லவேளை அவர் போய் சேர்ந்து விட்டார்!"

குத்தலான பேச்சு. என்றாலும் கமுக்கமாக தம் கணவரின் அழகை ரசிப்பது அவளுக்கு வழக்கம். அதேசமயம், மற்றவர்கள் கண் பட்டு தம் மஞ்சள் கயிறுக்கு ஏதேனும் ஆபத்து வந்து விடுமோ என்கிற பயம் அவளுக்கு எப்போதும் உண்டு.

இப்போதும் வரலெட்சுமி நோன்பு இருந்து சுமங்கலியாகப் போய் சேர்ந்து விட வேண்டும் என்பதுதான் அவளது எஞ்சியுள்ள பேராசை.

"ஆனா பாரு! ஒன் வரலெட்சுமி பாவம் கலான்னு ஒன்னை வுட்டுட்டு என்னத் தூக்கிட்டுப் போவப் போறா!"

அந்தக் கேலிப் பேச்சு தாளாமல் சொன்ன வாயில் இரண்டு போடு போட்டு சுருங்கி விடுவாள் கலா. மஞ்சள் அப்பிய அழகு முகம் அப்படியே வாடிப் போய்க் கிடக்கும். கருவிழி ஓரத்தில் எப்போது தரையில் வீழலாம் என்று நீர் கோர்த்து நிற்கும்.

"இந்த வாயி தானே என்ன இப்புடி எரக்கமே இல்லாம அழ வச்சுப் பார்க்குறது!"

"அடிக் கொலகாரி! வலிக்குதுடி!"

மெல்ல கத்திக் கொண்டே ஒற்றை மடிப்புடைய எலுமிச்சை இடுப்பை எக்கிப்பிடித்து வாரிக் கொள்ளப் பார்ப்பதும் அந்தப் பிடியிலிருந்து இலாவகமாகத் தப்பித்து விலகுவதும் இன்று நேற்று அல்ல பலகாலம் தொடர்வதும் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவர் தவிப்பதும் வாடிக்கையாகிவிட்டது.

"உஷ்ஷ்... ஏழு கழுதை வயசாயிட்டு. அதோட வயசுக்கு வந்த பேத்தி ஒருத்தி இருக்குறா. தோளு ஒசரத்துக்குப் பேரனும் வளர்ந்துட்டான். ஞாபகம் வச்சுக்கோங்க!"

"அதுக்கு?"

அந்த மூர்க்கத்தனமான எகிறலைக் கண்டு வேதனையில் துடித்தாள் கலா.

"அட பாவத்தே!...நா என்னத்தைச் சொல்லித் தொலைக்கிறது? இந்த மரமண்டைக்கு இது எப்பத்தான் புரியுமோ?"

தனசேகரால் அவளது அந்த உஷ்ஷை மட்டும் இந்த நொடி வரை சகித்துக் கொள்ள முடியவில்லை. நினைத்தாலே மண்டை கொதிக்கத் தொடங்கிவிடும்.

தனசேகர் ஓர் அரசு ஊழியர். கை சுத்தமான கடைநிலைப் பணியாள். சுருக்கமாகச் சொன்னால் பிழைக்கத்

தெரியாத சாம்பிராணி. அதற்காக அவர் என்றும் வெட்கப்பட்டதும் இல்லை. விசனப்பட்டதும் இல்லை. அதற்கேற்ப கலாவதியும் அவருக்கு நல்ல இல்லத்தரசியாகக் கிடைத்திருந்தாள். 600 சதுரத்தில் சிறிய அளவிலான அடக்கமான காங்கிரீட் வீடு. தேவையற்ற செலவுகளைக் குறைத்து சிக்கனம் செய்து சேமித்த சேமிப்பில் உருவான அழகான வீடு. இரண்டு பிள்ளைகள். மூத்தவள் காதல் திருமணம். அதற்காக ஓடிப் போக விடவில்லை. இளையவனுக்குப் பெரியோர் நிச்சயித்த மணவாழ்க்கை. ஆனால், நிரந்தர வேலையில்லை. அவன் கால் வைக்கும் இடமெல்லாம் கண்ணிவெடி தான். ஒன்றும் விளங்கவில்லை. குடி வேறு. குடிப்பவனுக்குப் பிந்தைய நிலையிலும் குடிநோயாளிக்கு முந்தைய நிலையிலும் குடிகாரனாக அவன் இருந்து வரும் அவலம். பெரிய கடைத்தெருவில் உள்ள ஏதோவொரு கடைக்கு இப்போது போய் வருகின்றான். ஆனாலும் ஒரு பயனும் அதனால் குடும்பத்திற்கு இல்லை. இனி பேசிப் பயனில்லை என்று குடும்பத்தில் எல்லோரும் தண்ணீர் தெளித்து விட்டு விட்டார்கள்.
இந்த நிலையில் மூன்று பிள்ளைகள். அதில் ஒன்று பிறந்த கொஞ்ச காலத்திலேயே தவறிவிட்டது. எஞ்சிய இருவரும் இப்போது திருச்சியிலும் கோவையிலும் அரசு இட ஒதுக்கீட்டில் கிடைத்த இடத்தில் தம் பொறியியல் மற்றும் வேளாண் கல்லூரிக் கனவை நனவாக்கி வருகின்றனர். தனசேகரை அண்டித்தான் பிழைப்பு! நல்லவேளை அரசாங்கம் மூலம் கிடைக்கும் சொற்ப ஓய்வூதியம் தான் அறுவர் பசியைப் போக்கி வாழ்க்கையைப் பயனுள்ளதாக்கி வருகிறது.

"டேய் தனா! நீ நெசமாத் தான் கேட்குறீயா?"

குணா தட்டி எழுப்பினார். புருவம் உயர்ந்திருந்தது. இருவரும் பள்ளி சிநேகிதர்கள். இருவருக்குள்ளும் ஒளிவு மறைவு இருந்தது இல்லை. குணா என்கிற குணசேகரனது குடும்பம் வசதியானது. கணவன் மனைவி இருவரும் வேலையில் இருந்தவர்கள். மனைவி இறந்து ஆறரை ஆண்டுகள் ஆகிவிட்டது. ஒரே மகன். அவனும் குடும்பத்துடன் சிங்கப்பூரில் வசித்து வருகிறான். யாரும் யாரையும் நம்பி இல்லை. ஆனாலும் குணா ஏதோ மன்னார்குடியில் இருந்து தஞ்சாவூருக்குச் சென்று வருவது போல் சிங்கப்பூருக்கு அடிக்கடி சென்று வருவது தனசேகர் உள்ளிட்ட நண்பர்களுக்கு நன்கு தெரியும்.

பணத்திற்கு பஞ்சமில்லை. என்ன கேட்டாலும் மகன் செய்து தந்து விடுவான். ஆனாலும் இவர் எதையும் கேட்பதில்லை. நிறைவான ஓய்வூதியம். நன்கு தெரிந்தவர்களிடம் கிடைக்கும் வட்டிப் பணம் வேறு. அதுபோக, இரண்டு காலனியிலிருந்து கிடைக்கப்பெறும் மாத வாடகை என ஒவ்வொரு மாதமும் காசு கொட்டிக் கொண்டிருந்தது. அதற்கேற்ப அவனும் நல்ல செலவாளி. உதவி என்று கேட்டு வருபவர்கள் யாரையும் வெறும் கையுடன் அனுப்பியதில்லை.

அவர்களாக மீண்டும் கொடுத்தால் மட்டுமே உண்டு. இல்லையென்றால் தர்மத்திற்கு என்று விட்டு விடக்கூடிய நல்ல குணம்.

அதேபோல், கொஞ்சம் சொகுசான மற்றும் தினுசான ஆளும் கூட. அளவான குடி தான். வெளிநாட்டு சரக்கு. சமையலுக்கு உறவுக்கார தூரத்துத் தங்கை முறை கொண்ட நடுத்தர வயது பெண்மணி நேயர் விருப்பத்திற்கேற்ப ருசியானதை செய்து விட்டு சென்று விடுவார். மற்ற பாத்திரம் கழுவுவது, துணி துவைத்துக் கொள்வது முதலான வீட்டு வேலைகள் அனைத்தையும் அவரே செய்து கொள்வது வழக்கம். ஆனாலும் அந்த தங்கையிடம் மட்டும் எந்த அளவிற்கு மரியாதை உள்ளதோ அந்த அளவிற்கு பயப்படவும் செய்வார்.

பெண் சகவாசம் தேவைப்படும் சமயங்களில் மட்டும் வெளியூர் சென்று வருவார். அதுவும் அத்திப் பூத்தாற்போல் தான். அடிக்கடி கிடையாது. மற்றபடி பெண்களிடம் கண்ணியமாகவே பழகுவார்.

"எனக்கே தப்புன்னு சொல்வீயேடா!"

"பொறுக்க முடியலடா. அதுவே பிபிய ஏத்துது!"

"சரி. ஏற்பாடு பண்றேன்."

"ஒண்ணும் பிரச்சினை இருக்காதுல்லே?"

"நா ஒன்ன அப்புடி விட்றுவேனா?"

"கா...சு?"

"அடச்சீ! போவியா!"

"எ...ப்...போ?..."

"வர்ற ஞாயித்துக்கெழமை. சரியா?"

அரைகுறையாக தலையாட்டினாலும் மனசு உள்ளே ஒருவித குறுகுறுப்பும் கூடவே துரோக வலியும் இருக்கத்தான் செய்தது தனசேகருக்கு.

அது கல்லூரி பெண்கள் தங்கும் வாடகைக்கு விடப்பட்ட சுமாரான குடியிருப்பு. கல்லூரி விடுதியை விட கட்டணம் குறைவு. கெடுபிடி அதிகம் இல்லை என்றாலும் பாதுகாப்பு வசதிக்கு ஒரு குறையும் இருக்காது. வெளியாள் யாருக்கும் அனுமதி இல்லை. பெற்றவர்கள் மட்டுமே எந்தவொரு கேள்வியும் கேட்காமல் மாடிக்கு அனுமதிக்கப்படுவர். மற்றபடி உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் தொலைபேசி வழியே பெற்றோர்கள் அனுமதித்தாலும் கீழே குடியிருக்கும் உண்மையான சொர்ணா அக்கா போல் காட்சியளிக்கும் பெண்மணி அனுமதிப்பது என்பது குதிரைக்கொம்பு. பெண்களாக இருந்தாலும் வேண்டா விருப்பாக சம்மதித்து தாமும் கூடவே வழித்துணையாக வந்திருந்து அவர்கள் போகும்வரை ஏதேதோ நோட்டம் விட்டுக்கொண்டே இருப்பது வழக்கம். மற்றவர் தனியுரிமை பற்றி கொஞ்சமும்

கவலைப்படாதவர் மட்டுமல்ல சமரசமும் செய்து கொள்ள விரும்பாதவர். இதில் வேடிக்கை என்னவென்றால் அவரது மெய்யான பெயரும் சொர்ணா தான். கணவர் காவல்துறை உயர் அதிகாரி. அது போதாதா? இரண்டும் பெண் குழந்தைகள் தான். இருவருக்கும் காலத்தில் திருமணம் முடித்தாகிவிட்டது.

மாடியில் இதற்காகவே எட்டு அறைகள் உள்ளன. ஒவ்வொரு அறையிலும் மூன்று பேர் தாராளமாகத் தங்கிக் கொள்ள முடியும். நல்ல காற்றோட்டமான படுக்கை வசதி. உள்ளேயே கழிவறை மற்றும் குளியலறை வசதிகள். சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் பொதுவான பொழுதுபோக்கு தொலைக்காட்சி வசதியும் இருப்பது கூடுதல் சிறப்பு. காசு ஒரு பொருட்டல்ல. ஏழை எளியவர்களுக்குச் செய்யும் ஒரு சிறு உதவி. பெண் பிள்ளைகள் படித்து முன்னேற வேண்டும் என்கிற நல்லெண்ணம் தாம் இருவருக்கும். குறிப்பாக சொர்ணாவின் பிடிவாதம் தான் இதற்கு மூல காரணம் என்று சொல்வது மிகையாகாது. குறிப்பாக இரவில் யாரும் வெளியில் போகவும் நேரம் கழித்து உள்ளே வரவும் சொர்ணா யாரையும் அனுமதிப்பதில்லை. மிகவும் கறாரான பேர்வழி. வழிதவற நினைக்கும் பெண் பிள்ளைகளைப் பேசிப்பேசியே ஒருவழிக்குக் கொண்டு வந்து விடுவதில் மகா கெட்டிக்காரி. புத்திசாலியும்கூட. நேரம் கிடைக்கும் போதெல்லாம் தாமே வலிய சென்று அறநெறி போதிக்கும் நவீன நிவேதிதா. அதனாலேயே இந்த மாடி வீட்டுப் பெண் பிள்ளைகளின் பெற்றோர்கள் நிம்மதியுடன் ஊரில் இதுகுறித்து சஞ்சலம் ஏதுமின்றி வாழ்ந்து வருகின்றனர் என்று திடமாகச் சொல்ல முடியும்.

இவ்வளவிற்கும் டிமிக்கிக் கொடுக்கும் ஆளும் அவ்வப்போது அங்கு வந்து மாட்டிக் கொள்வதுண்டு. பறவைகள் மட்டுமல்ல பெண் பிள்ளைகளும் பலவிதம் தான் போலும்!
ரேஷ்மா. கல்லூரி இறுதியாண்டு மாணவி ஒருத்தியின் பெயர். வசதியான குடும்பம் தான். நல்ல ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்ளவே சொர்ணாவிடம் அனுப்பி வைக்கப்பட்டவள். ஆடிய காலும் பாடிய வாயும் சும்மா இருப்பதில்லை என்பார்கள். அப்படித்தான் இவளும். சொர்ணாவும் இவள் மீது கண்கொத்திப் பாம்பாக இருந்து என்ன புண்ணியம்? கழுவுற மீனில் நழுவுற மீன் அவள்!

"அக்கா என்ன சொல்லுது?"

நையாண்டியாகக் கேட்பாள் ரேஷ்மா. பேச்சில் மட்டுமல்ல நடத்தையிலும் ஒருவித திமிர்த்தனம் தெரியும். நல்ல ஆடம்பரக்காரி. சொகுசு விரும்பி. ஒருநாள் கூட முறை சமையல் செய்தது கிடையாது. ஏதேனும் சாக்குப்போக்குச் சொல்லி சாமர்த்தியமாகத் தப்பித்து விடுவாள். அப்படித்தான் ஒருதடவை வேறு வழியே இல்லாமல் மிரட்டி சமைக்க சொன்னபோது எதையெதையோ அள்ளிக்கொட்டி

வாந்தி பேதி போக வைத்து விட்டாள். அத்துடன் அவள் தம் முறை வரும்போது சமைக்கட்டுமா என்றால் காவியா கையெடுத்துப் கும்பிட்டு அவளுக்காக தாமே ருசியாக சமைத்து விடுவதுண்டு. அதற்காகவே, காவியா மீது ரேஷ்மா ஒரு தனிப் பிரியம் வைத்திருப்பாள். தமக்குப் பாத்தியப்பட்ட எல்லாவற்றையும் எடுத்து உபயோகப்படுத்திக் கொள்ள வற்புறுத்தினாலும் காவியா அது எதையும் தொடவே மாட்டாள். ஆசை உள்ளுக்குள் அருவி போல் பெருக்கெடுக்கும். வெளியில் காட்டிக் கொள்ள மாட்டாள். தம் குடும்ப வறுமையும் சொர்ணாவின் போதனையும் அவளைச் சாட்டை போல் சொடுக்கிக் கொண்டிருக்கும் என்பதே உண்மை.

"ஒரு அம்மா போலத் தானே அக்கா நமக்கு நல்லது நெறைய சொல்றாங்க. கொஞ்சம் கேட்டுத் தான் தொலையேன்!"

காவியா கடிந்து கொள்வாள். அக்கறையுடன்.

"அடிப்போடீ! இந்த மகிழ்ச்சி எல்லாம் கல்யாணம் ஆனதும் காலி! சாமியாரே சல்சா பண்ற காலமா போச்சு இப்போ!"

"அதுக்காக?..."

வரிந்து கட்டிக் கொண்டு வந்த காட்டாற்று வெள்ளத்தை மடை மாற்றினாள் ரேஷ்மா. ஒரு குறும் சிரிப்புடன்.

"ஏய்! இந்த புது ஆப்பிள் கைப்பேசி ஏதுடீ?"

ரேஷ்மா கையில் ஒய்யாரமாக உட்கார்ந்திருந்ததை அப்போதுதான் கவனித்த காவியா ஊர் கேட்கும்படி கத்தியே விட்டாள்.

"ஏன்டீ இப்புடி ஆந்தையாட்டம் அலர்ற?"

நல்லவேளை யாரும் அங்கில்லை.

"இது ஏது?"

மெல்ல கிசுகிசுத்தாள் காவியா. நாக்கைக் கடித்துக்கொண்டு.

"அது சொன்னா ஒனக்குப் புரியாது!"

"சொல்லு! கேக்குறேன்!"

"சும்மா ஒரு மணிநேரம் மட்டும்!"

கண்ணடித்தாள் ரேஷ்மா. நிறமிழந்து சோகையாகக் காணப்படும் அவளது சுழித்த உதடு கன்றிப்போயிருந்தது.

"ஏன்! என்னாச்சு?"

"சரி அதை உட்றீ!"

உடம்பை வில் போன்று நெளித்தவள் அங்கங்கே ஊமைவலி இருப்பதை உணர்ந்தாள். நல்ல சூடான வெந்நீரில் குளிக்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு. விரைந்தாள். காவியா

அவளுக்காகவே நெடுநேரம் வெளியே காத்திருந்தாள். பலவித யோசனைகளுடன். அவளுக்குள் இப்போது ஒரு புதுவித நப்பாசை அத்தனை இறுக்கத்தையும் மீறி மெல்ல துளிர் விட்டிருந்தது. இதை அவளே அவளை நம்பாமல் ஆச்சர்யத்தில் அங்குமிங்கும் அலை பாய்ந்தாள். பழைய கீறல் விழுந்த ஒப்பேற்றித் தந்த கைபேசி அவளைப் பார்த்து நக்கலாக சிரித்துக் கொண்டிருந்தது...
வழக்கமாக வந்து போகும் இடமாதலால் குணாவிடம் எந்தவொரு பதற்றமும் தட்டுப்படவில்லை. தனாவின் நிலைமையே வேறு. உச்சி வெயில் மண்டையைப் பிளந்தாலும் ஏதோ கும்மிருட்டில் தட்டுத் தடுமாறி நடப்பது போன்ற பய உணர்வு இதயம் கவ்வியது போலிருந்தது. பிசகிய புத்தியை எவ்வளவோ சரிப்படுத்த நினைத்தாலும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாலும் அந்தப் பருத்திக்காய் கடைசிவரை பழுக்கவே இல்லை.

இப்போது எப்படி இதற்குள் வந்து சேர்ந்தோம் என்று குனிந்த தலையுடன் அதிதீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த தருணம் ஏற்கனவே உள்ளுக்குள் யாரோ இதற்காகத் தயாராவது போன்று அவரால் நன்கு உணர முடிந்தது.

அது அவருக்குள் பீதியை மேலும் அதிகப்படுத்தியது. அந்தக் குளிரூட்டப்பட்ட அறையில் தொப்பலாக நனைந்து கொண்டிருந்தார் தனசேகர். மெதுமெதுவென்று இருந்த பால் வண்ண மெத்தையின் ஒரு நுனியில் பட்டும் படாமல் தலைக்கு இரண்டு கைகளையும் கொண்டு முட்டுக் கொடுத்து வில்லாக வளைந்து கிடந்தார். விரலி மஞ்சளும் அரக்கு சாந்துப் பொட்டும் சேர்ந்து கமகமக்கும் கலாவின் ஆசை முகம் அவரது நினைவில் வந்து வந்து சென்று கொண்டிருக்க...

அந்த பளபளக்கும் பளிங்கு தரையில் புள்ளியிட்டன கண்ணீர்த் துளிகள்.

நிமிர்ந்து பார்த்தால் அங்கிருந்த எல்லாமும் அவரை நோக்கிக் கைகொட்டிச் சிரிப்பது போல தெரிந்தது. எதையும் ஏறெடுத்துப் பார்க்கவே பிடிக்காதவராக அடம் பிடித்துக் கிடந்தவர் நாசியைத் துளைத்தது. அத்தர் வாசம் நாராசமாய். அதனைத் தொடர்ந்து ஏதோவோர் உருவம் தம்மை நோக்கி வர...வர...

உள்ளுக்குள் திரண்டு கொண்டு வந்த பயம் முட்டிக்கொண்டு கசியத் தொடங்கியதும் ஓய்வை விரைய எழுந்தவருக்குப் பேரதிர்ச்சி.

அந்த கண நேரத்தில் பூமி பிளக்கும் விதமாக காவியாவின் அலறல் விண்ணைக் கிழித்தது. ஒரு புதிய காரிருள் சூழ.

"தா... த்... தா...ஆஆஆ!..."

--

அமுதாராம்

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.